நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை
தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 2
தொகுதி: 113
திருவள்ளுவர் ஆண்டு 2050

திங்கள் இதழ்
விலை: ரூ.20
பிப்ரவரி - 2019

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
1867-1911

மன்னர் பாசுகர சேதுபதி
1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
திருமதி. இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். க.சந்திரசேகரன் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ்மணம் 4

2. சிலம்புப்புதையல் - "கண்களி மயக்கக் காதல்" 6
 - முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. காப்பிய உவமை 10
 - உயர்திரு எஸ்.வையாபுரிப்பிள்ளை

4. மரு 17
 - பேராசிரியர் செ.வை.சண்முகம்
 சென்ற இதழின் தொடர்ச்சி

5. வீரசோழியம் 23
 -பேராசிரியர் ப.மருதநாயகம்

6. செயர் வாய்பாட்டு வினைகள் 30
 - பேராசிரியர் இரா.கோதண்டராமன்

7. இமயத்தின் உச்சியில் இரட்டைக் காப்பியங்கள் 36
 - பேராசிரியர் பழனி அரங்கசாமி

8. சங்கச் செய்திகள் 41

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

சேரன் செங்குட்டுவன் ஆட்சிச்சிறப்பு தண்டமிழ் ஆசான் சாத்தனாரை வியப்பில் ஆழ்த்தியது. மேட்டுக்குடி மக்கள் அரசியல் கோலோச்ச, காடுமலைகளில் கழனி திருத்தி வாழ்கின்ற மக்கள் அல்லல்பட்டு ஆற்றாது அறற்றும் அவலம் தொடர்கின்ற இக்கால அரசியல் சமூகப் பொருளாதாரச் சூழல் பேரறிஞர் இளங்குமரனாரை சிந்திக்க வைக்கிறது. எளிய மக்களுக்கும் வாழ்க்கை நலங்கள் சிறக்க நல்லாட்சி மலரும் நாள் என்று வரும் என்னும் ஏக்கக் குறிப்புக் கட்டுரையின் நிறைவாகிறது.

பரணரும் இளங்கோவும் போற்றும் பாடுபொருளாக அமைந்தவன் சேரன் செங்குட்டுவன்; அவனுடைய ஆட்சிமுறை நாட்டின் கடைக் கோடியில் இருக்கும் மக்களையும் மகிழ்ச்சியில் திகைக்கச் செய்கிறது. இவ்வரிய ஆட்சிமுறை தண்டமிழ்ஆசான் சாத்தனார் கண்களிக்கும் காதலாக மலர்கிறது. “கண் அல்லது இல்லைபிற” என்பதால் வார்த்தைகள் வேண்டா; சாத்தனார் பெற்ற நல்லுணர்வு சூழலை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. உலகம் இன்புற்று இருக்க நினைப்பதன்றிச் சான்றோர் வேறு ஒன்று அறியார் கருணையற்ற ஆட்சி கடுகி ஒழியவும் அருள் ஆட்சி மலரவும் எண்ணம் விரிகிறது. அதுவே கட்டுரையின் மூலம் கற்றுஇன்புறுக.

“காப்பிய உவமை” என்னும் தலைப்பில் 1949ல் “செந்தமிழ்” இதழில் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் எழுதிய கட்டுரை இடம் பெறுகிறது. தமிழ் ஆய்வு நெறியை தொடங்கிவைத்து முறைப்படுத்தியவர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையாவார். ஆய்வு மாணவர்கள் ஆய்வைத் தொடங்குமுன் அவருடைய நூல்களைக்கற்றல் இன்றியமையாததாகும். தொல்காப்பியம், சங்க இலக்கியம், காப்பியகாலம் வரை இலக்கியத்தில் உவமைக்குரிய ஆளுமையை சிறப்புற விளக்குகின்றார். “இதிகாச உவமை” (Epicsimile) என மேலைநாட்டறிஞர்கள் விதந்து கூறுகின்ற உவமை சிலப்பதிகாரத்தில் பாங்குற அமைந்திருப்பதைப் பேராசிரியர் எடுத்துரைக்கும் செய்தி கற்பவர்க்கு இன்பம் தரும்;

பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்கள் "வீரசோழியம்" என்னும் இலக்கண நூலைச் செந்தமிழ் இதழில் தமிழ் மாணவர்களுக்கு அறிமுகம் செய்வது மிக்க பயனுடையதாகும். தமிழ் மாணவர்கள் தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்களை நன்று அறிவர். நன்னூல் எழுத்து, சொல் இலக்கணத்தை மட்டும் பேசுகிறது; வீரசோழியம் அதனுடன் பொருள், யாப்பு, அணி குறித்தும் பேசுவது குறிப்பிடத்தக்கது. வீரசோழியம் குறித்த தவறான கருத்தை எடுத்துரைத்து வீரசோழிய ஆசிரியர் தமிழ் இலக்கணத்தையே எடுத்துரைப்பதை பேராசிரியர் விளக்கும் செய்தி குறிப்பிடத்தக்கது. இடைக்காலத்தில் புத்த சமய எதிர்ப்புக் கொள்கையால் சைவர்கள் இதனைக் கற்பனை என்பர் என அபிதான சிந்தாமணி குறிப்பிடுவது இங்கு எண்ணத்தக்கது. வீரசோழியம் பற்றிச் சிந்திப்பதற்கு ஒரு அரிய வாய்ப்பாக பேராசிரியர் மருதநாயகம் அரிதின் முயன்று கட்டுரை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

"செயர் வாய்பாட்டு வினைகள்" குறித்துப் பேராசிரியர் இரா.கோதண்டராமன் ஆய்வுக்கட்டுரை அளித்துள்ளார். செயர்வாய்பாட்டு வினைகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. ஆனால் தொல்காப்பியம் செயர்வாய்பாட்டு வினையைக் குறிப்பிடவில்லை என்பது சிந்தனைக்குரியதாகும். அது குறித்துப் பேராசிரியர் அளித்துள்ள விளக்கம் ஆசிரியர் மாணவர்கள் மேலும் சிந்திப்பதற்குரிய செய்தியாக எடுத்துக்கொள்ளலாம்.

பேராசிரியர் பழனி.அரங்கசாமி சிம்லாவில் உள்ள உயராய்வு மையத்தில் நடைபெற்ற இரட்டைக்காப்பிய கருத்தரங்கிற்கு அறிஞர் குழாத்துடன் பயணித்த அனுபவங்களையும் ஆங்குள்ள சிறப்புக்களையும் எடுத்துரைக்கிறார். தமிழ் மாணவர்கள் ஒருமுறை சென்றுவரும் வாய்ப்பினை பெற வாழ்த்துவோம்.

பேராசிரியர் செ.வை.சண்முகம் "மரு" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையின் இறுதிப்பகுதி இவ்விதழில் இடம் பெறுகிறது. தொல்காப்பியரின் கோட்பாட்டு மேலாண்மை, மொழிமேலாண்மை, தரவு மேலாண்மை எனத் தொல்காப்பியரின் பல்வகை உத்திகள் குறித்த விரிவான ஆய்வு தேவைப்படுவதை ஆசிரியர் எடுத்துரைப்பது மேலும் ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களுக்குப் பயனுடையதாகும்.

சிலம்புப் புதையல்

(3) "கண்களி மயக்கக் காதல்"

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

இக் கட்டுரைத் தலைப்பைக் கண்டதும் "அக் காதலர் எவர்?" என்னும் வினாவே எவர்க்கும் எழுதல் ஒருதலை. ஆனால் அவர், "அந்தமில் இன்பத்து அரசாள் வேந்த"ராகிய இளங்கோவடிகளின் இனிய நண்பரும், மணிமேகலை துறவை 'ஆறைங் காதை'யில் பாடியவரும் ஆகிய தண்டமிழ் ஆசான் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரே எனின் வியப்புத் தோன்றக்கூடும். உண்மையில் சாத்தனாரே 'கண்களி மயக்கக் காதலர்' என்பதை அடிகளாரே கூறிய பின்பு ஐயுறுதற்கு அணுத்துணையும் இடமில்லை.

கள்ளும் நறவும் முதலாயின உண்டார்க்கே உள்ளக் களிப்புண்டாம். ஆனால் காண்டற்கரிய காட்சிகளைக் கண்டவர்க்கும் 'கண்களி'யுண்டாம். மையலுற்றார்க்கே மயக்கம் உண்டாம்; எய்தப் பெறாத இன்பம் ஓரிடத்தில் எய்தியவர்க்கே காதல் உண்டாம். இம்மூன்றும் ஒருங்கெய்தப் பெற்றார்க்கே கண்களி மயக்கக் காதல் தோன்றும். அவ்வாறு தோன்றப் பெற்றாரே கண்களி மயக்கக் காதலர் ஆவர். சாத்தனார் அந்நிலையை எப்போது எவ்விடத்து எந்நிலையில் உற்றார்?

மலைவளங் காணச் சென்ற செங்குட்டுவனுடன் இருந்த மதுரைச் சாத்தனார், அவன் முன்னிலையிலேதான் கண்களி மயக்கக் காதல் கொண்டு திகழ்ந்தார்.

வஞ்சி முற்றம் நீங்கி, அஞ்சாமுழவின் அருவி ஆர்க்கும் மஞ்சுசூழ் சோலை மலைவளம் காணுதற்குக் கோப்பெருந்தேவியும், அவர் ஆயமும், தன் பரிவாரங்களும் புடைசூழ நெடுவேலான் குன்றம் நண்ணிய செங்குட்டுவன், நெடியோன் மார்பின் ஆரம் போல விளங்கிய பேரியாற்றின் இடுமணற் பரப்பின் மேல் இனிது தங்கினான். அப்பொழுது உடனிருந்த சாத்தனார் கண்களி மயக்கம் கொண்டார் என்றால் எதனால் என்னும் வினா எவர்க்கும் எழும்பும்.

கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பாம் மலைக்காட்சி சாத்தனாரைக் கண்களி மயக்கக் காதலில் ஆழ்த்தியதா? அரிமாவன்ன

ஆற்றலும் தோற்றமும் அமைந்த செங்குட்டுவன் பொலிவுதான் கண்களி மயக்கக் காதலில் ஆழ்த்தியவா? அரசியின் ஆயமும் அரசியல் சுற்றமும்தாம் அக் காதலில் ஆழ்த்தினவா? வென்றிச் செவ்வேள் வேலன் பாணி முதலாகப் பக்கமெல்லாம் பரவியெழுந்த பல்வேறு ஒலி முழக்கங்கள் தாம் தண்டமிழ் ஆசானைக் கண்களி மயக்கக் காதலர் ஆக்கினவா? திறை சுமந்து நிற்கும் தெவ்வர் போல யானைவெண் கோடும் அகிலின் குப்பையும் முதலாக அளவற்ற அரும்பொருள்களைச் சேரவேந்தன் திருவடிகளில் படைத்து, "ஏழ்பிறப்படியோம்; நின்கொற்றம் வாழ்க" என்று வாழ்த்திய குன்றக் குறவர்தம் கூற்றும், செய்கையும் தோற்றமும் பிறவும் கூலவாணிகரைக் கண்களி மயக்கக் காதலர் ஆக்கினவா?

இவ்வனைத்தும் சாத்தரைக் களிப்பூட்டி இருக்கலாம் மயக்கமோ காதலோ ஊட்டியிருக்க மாட்டா. மலைநாட்டை முதன்முதலாக இப்பொழுதுதான் அவர் காண்கிறாரா? செங்குட்டுவன் சீர்மையை இப்பொழுதுதான் நேரிடையாக நோக்குகிறாரா? இளங்கோவடிகளின் கெழுதகை உழுவலன்பினர் சாத்தனார். ஆகலின் இச்சேர நாட்டுச் செலவு முதன்முறையாக இருந்திருத்தற் கியலாது. ஆதலால் இக்காட்சிகள் சாத்தரைக் களிப்புறச் செய்தவை ஆகலாமே அன்றி, 'மயக்கக் காதல்' ஊட்டுபவையாக மாட்டா.

குன்றக் குறவர் செங்குட்டுவனை வணங்கி எழுந்து,

"கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை இழந்து தனித்துயர் எய்தி
வானவர் போற்ற மன்னொடும் கூடி
வானோர் போற்ற வானகம் பெற்றனர்"

என்று தாம் நேரில் கண்ட நிகழ்ச்சியைக் கூறினர். இதனைச் சாத்தனாரும் கேட்டார்.

கொற்றவன் தவறிழைத்ததும், கோவலன் மாண்டதும், கண்ணகி வழக்குரைத்ததும், அதன் விளைவும் மதுரையில் கண்டு அறிந்தவர் சாத்தனார். கண்ணகியார் கோவலர் இவர் தம் முன்னைச் செய்தியைக் கேட்டும் அறிந்தவர் அவர். ஆனால் கண்ணகியாரின் பின்னைச் செய்தி இன்னதென அவர் அறியார். ஆகலின் கண்ணகியார் கணவனுடன் கட்புலம் காண விட்புலம் போய செய்தியைக் குன்றக் குறவர் கூறக் கேட்ட அவர் கண்ணகியாரின் தெய்வ நிலையை எண்ணி எண்ணி மயக்கம்

கொண்டார். காட்சியால் கண்களி கொண்ட அவர் கண்ணகியாரின் பழுதறு வரலாற்றை முழுதுற அறியும் வாய்ப்புக் கிட்டிய அளவில் கண்களி மயக்கத்தினர் ஆனார்.

கண்ணகியாரைப் பற்றிய செய்தியைக் குன்றக்குறவர் செங்குட்டுவனிடம் உரைத்த காலையில் அவரை,

"எந்நாட்டாள் கொல் யார்மகள் கொல்லோ
நின்னாட் டியாங்கண் நினைப்பினும் அறியேம்"

என்று கூறிய வாய்மொழியே சாத்தரைக் கண்களி மயக்கக் காதலர் ஆக்கிற்றாம்.

சாத்தனார் மாபெரும் புலவர்; மணிமேகலை யாத்த தண்டமிழ் ஆசான். குன்றவர் கூறிய உரையில் நன்றுறத் தோய்ந்து நெஞ்சம் பறி கொடுத்தார். 'எந்நாட்டாள் கொல்' என்று குன்றவர் வினாவிய வினா அவரை ஆட்கொண்டது. 'எந்நாட்டாள்?' என்பதில் ஒவ்வொரு நாடும் அடங்கத்தக்கது தானே. சேரநாட்டுக்கு மட்டும் விலக்குண்டா? பருவரல் ஊட்டிய பாண்டி நாடும் சரி, பதியெழுவறியாப் பழங்குடி கெழீஇய பொதுவறு சிறப்பிற் புகார்ச் சோணாடும் சரி, செழுமலைச் சேர நாடும் சரி 'எந்நாடு' என்பதனுள் அடங்கியே தீரும். இவ்வெண்ணத்தில் இருந்து விடுபடு முன்னரே,

'நின்னாட்டி யாங்கண் நினைப்பினும் அறியேம்'

என்னும் குன்றக்குறவர் உரை சாத்தனார் செவியினிக்கப் பாய்ந்தது.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுவார் - ஆற்றுவாரற்று அலமந்து திரிவார் - உறுப்புச் சிதைந்து உலமருவார் - ஒரு தனி வந்து இரங்கி நிற்பார் - இச்சேர நாட்டினராக இருத்தற்கு இயலாது. செங்குட்டுவன் என்னும் செங்கோல் வேந்தன் நாட்டின் எல்லையுள் இத்தகைய அவலம் ஏற்பட்டிருக்க முடியாது" என்று அவர்கள் கருதுவதை உட்கொண்டு - குன்று வாழ் மக்களும் கோல் நிலை உணர்ந்து கூறும் நிலைமையில் செங்குட்டுவன் ஆட்சிச் சீர்மை உண்மையை உட்கொண்டு - சிறக்க எண்ணினார். நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து இன்புற்றார். "செங்குட்டுவன் செங்கோல் மாண்புதான் என்னே! என்னே!" என இறும்பூதெய்தினார். கண்களிப்ப நோக்கி, மையல்மிக்கு, இன்னதெனை இயம்பவொண்ணா இன்பநிலையுற்றார். அந்நிலையில் கண்களி மயக்கக் காதலராக விளங்கினார்.

சாத்தனார் உணர்வை உள்ளவாறு உணர்ந்தவர் இளங்கோவடிகளார். ஆதலால்,

"மண்களி நெடுவேல் மன்னவற் கண்டு
கண்களி மயக்கக் காதலோ டிருந்த
தண்டமிழ் ஆசான் சாத்தன்"

என்றார்.

மன்னர் அவையிலும், கற்றறிந்தோர் மையத்திலும் வாழும் புலவரொருவர் தம் புரவலனை நோக்கிச்,

"சோறு படுக்கும் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெறல் அறியார்நின் னிழல்வாழ் வோரே
திருவில் அல்லது கொலைவில் அறியார்
நாஞ்சில் அல்லது படையும் அறியார்" *(புறம் 20)*

என்று நயந்து பாராட்டுவதிலும், ஆள்வோர் தொடர்பென்பது அறியாமல், அறிவறிந்த கல்வியும் பெறாமல், காடுமலைகளில் வாழும் எளிய மக்களும் அல்லற்பட்டு நிற்பாளைக் கண்டு, 'எந்நாட்டாள் கொல், இந்நாட்டியாங் கண் நினைப்பினும் அறியேம்' என்று வினவுமாறு ஒரு நாட்டின் ஆட்சி நடைபெறும் என்றால், அவ்வாட்சி அன்றோ உலகம் எடுத்துக் காட்டாகக் கொள்ளத்தக்க ஆட்சி. அவ்வாட்சியைக் கண்டு உலகம் கண்களி மயக்கம் கொள்ளும் காலம் வருமா? வாழ்க கண்களி மயக்கக்காதல்!

வாழ்த்து

கட்டளைக் கலித்துறை

தறைமன்னு கூடற் றமிழ்ச்சங்கந் தாங்குந் தலைமைபுனை
யிறைமன்னு பாண்டித் துரைமன் பிரிய வெளியமுறுங்
குறைமன்னு றாவகை நீக்கின நாலிக் குவலயத்தின்
மறைமன்னு சுப்பிர மண்ணிய நாவலன் வாழியவே.

- வி.சாமிநாதன்

காப்பிய உவமை

(1949 தொகுதி - 46 பகுதி -1 செந்தமிழ் இதழில் வெளிவந்த கட்டுரை)

- உயர்திரு **எஸ்.வையாபுரிப்பிள்ளை**

காப்பியமாவது யாது? கவிஞன் இயற்றிய கவிதைகளால் அமைந்த எல்லா நூல்களையும் நாம் காப்பியம் என்று சொல்லுவதில்லை; குறிப்பிட்ட ஒரு செய்யுளிலக்கிய வகையையே காப்பியம் என்கிறோம். உதாரணமாக: சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலியன காப்பியங்கள், சங்க நூல்கள் என்று வழங்குகிற பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பின்வந்த திருக்குறள் முதலியவை காப்பியங்கள் அல்ல. முற்கூறிய காப்பியவகைகளில் வரும் உவமைகளைப் பற்றியதே இக்கட்டுரை.

உவமை என்பது யாது? ஒருபொருளை வேறொன்றினோடு ஏதேனும் ஒரு வகையில் ஒப்பிட்டுக் கூறுவதுதான் உவமை. 'பொன் போல் மேனி' (நற்றிணை.324) என்பதில் மேனியைப் பொன்னோடு ஒப்பிடுதல் உதாரணமாம். கவிதைக்கலையின் முக்கியமான அம்சங்களுள் ஒன்று உவமை. செய்யுளின் பொருளும் வடிவும் உவமையைக் காட்டினும் மிக முக்கியமே. ஆனால் அப்பொருளைப் புஷ்டி பெறச்செய்து நிரப்புவதும், அதனைச் சுவைத்து அனுபவிப்பதற்குத் தகுதியாக்குவதும் உவமையாகவே உள்ளது. இக்காரணத்தால் உவமையின் இயல்பை நன்கு விசாரித்துணர்வது மிக அவசியமாகும்.

இவ்வுவமையைக்குறித்து நம் பண்டையாசிரியர்களுள் தொல்காப்பியர் ஓர் இயல் தனிப்பட அமைத்திருக்கிறார். 'நன்மாமயிலின் மென்மெல இயலி' (மதுரைக்.608) எனத் தொழில்பற்றியும், 'மாரியன்ன வண்கை' (புறம்.133) எனப் பயன்பற்றியும், 'துடிபோலும் இடை' என வடிவுபற்றியும், 'தளிர் ஏர் மேனி' (நெடுநல்.148) என நிறம்பற்றியும் உவமைகள் வரும். உவமிக்கும்பொருளை உவமானம் என்றும், உவமிக்கப்படும்பொருளை உவமேயம் என்றும் கூறுவர். தொழில் பயன் முதலியன ஒப்புமைக்குணங்களாம். உவமேயத்தைக் காட்டிலும் உவமானம் உயர்ந்ததாகவே இருக்கும்.

என்ன என்ன நோக்கத்தோடு உவமை தோன்றும்? சிறப்பு, நலன், காதல், வலி என்ற நான்கினையும் நோக்கமாகக்கொண்டு இது தோன்றும். இந்நோக்கங்களை 'நிலைக்களம்' என்றனர் தொல்காப்பியர்.

'உயிர்க்குயிரன்னர்' (குறுந்.218) என்ற இடத்திலே காதலை நிலைக்களமாகக்கொண்டு உவமை பிறந்தது. இவ்வாறே மற்றவைகளையும் தெரிந்து கொள்ளலாம். இவைகளேயன்றி, உவமேயம் இழிவுறுதலும் ஒரு நிலைக்களமாகும். 'அரவுநுங்கு மதியின் நுதலொளி கரப்ப' (அகம்.313; 'பாம்பு விழுங்கிய சந்திரனைப்போல நெற்றியொளி மழுங்க') என்ற இடத்திலே நெற்றியின் ஒளி மாய்ந்துவிடுதலுக்கு வரும் உவமானம் இந்நிலைக்களத்திற்கு உதாரணமாம்.

இவ்வாறு ஒப்புமைக்குணங்களையும் நிலைக்களங்களையும் விளக்கியதனோடு, சில உவமைகளையும் உவமைகளின் ஆட்சி நியமங்களையும் தொல்காப்பியர் கூறியுள்ளார். உவமை வகைகளுள் சுட்டிக்கூறாவுவமம், உள்ளுறையுவமம் முதலியன குறிக்கத்தக்கன. உள்ளுறையுவமம் அல்லது உவமப்போலி வடமொழியில் அந்யாபதேசம் என்று கூறப்படும்.

தன்பார்ப்புத் தின்னும் அன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத் தவனூ ரென்ப (ஐங்குறு.41)

'தன்குட்டியைத்தின்னும் அன்பில்லாத முதலை' என்பது கொடுமை மிக்க தலைவனைக் குறிக்கும் என்றும், வெண்பூம்பொய்கை என்பது தலைவன்பிரிவால் வருந்தும் தலைவியின் பசப்புநிறத்தைக் குறிக்கும் என்றும் கொள்வர். இதனை உவமைவகை என்றல் பொருத்தமாகுமா என்று பலரும் ஐயுறலாம். பிறமொழிக்குரிய அணியிலக்கணங்களில் இந்த உவமைவகை காணப்படுவதாகத் தெரியவில்லை. ஆனால் தலைவன் தலைவியது இயல்புகளையுணர்த்தும் ஒரு குறிப்பு ஊர்க்குத்தந்துள்ள அடைமொழியில் உள்ளது. இக்குறிப்பு உவமையை அடிப்படையாகக்கொண்டது. இவ்வாறு வருதற்குப் பிற்காலத்தார் கருத்துடையடைகொளியெனப் பெயரிடுவர்.

உவமையை ஆளும் நியதிகளில் தொல்காப்பியர் கூறும் சில விஷயங்கள் நமக்கு வியப்பை உண்டுபண்ணலாம். தலைவி கூறும் உவமம் அவளது நிலத்தில் அவளறிந்த பொருள்கள் பற்றியே இருத்தல் வேண்டும்; தோழிகூறும் உவமம் அந்நிலத்துள்ள எல்லாப்பொருள்கள் பற்றியும் இருக்கலாம்; தலைவன்கூறும் உவமம் அவனது தலைமைதோற்றுவதாய் இருக்கவேண்டுமாம். இவை போன்ற நியதிகட்குத் தக்க காரணமும் உளது. இந்நியதிகள் காதல்பற்றிய செய்யுட்களுக்கே உரிமையுடையன. நாடகநெறியில் நோக்கினால் இக்காரணம் தெற்றெனப் புலப்படும். உவமையை ஆளும் பொது நியதிகளுள் இவற்றிற்கு இடமில்லை.

பிறிதொரு முக்கியமான விஷயத்தையும் தொல்காப்பியர் உணர்த்துகிறார். உருவகத்தையும் உவமையிலேயே அடக்கிவிடுகின்றனர். உண்மையிலே எல்லா அணிகளும் உவமையைத்தான் அடிப்படையாய்க்கொண்டன. இக்காரணத்தாலேயே,

உவமை யென்னும் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கிற் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவ ரிதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்கும்மே

என்று கூறப்படுகிறது. இக்கருத்தை மேற்கொண்டே தொல்காப்பியரும் உவமையைப்பற்றி மட்டும் விவரித்து, மற்றை அணிகளைக் குறித்து யாதும் கூறாதுவிடுத்தனர்.

தொல்காப்பியர் கூறிய உவமையியல்புகள் அதன் அடிப்படையான உண்மைகளை நன்றாகப் பாகுபடுத்தியுணர்த்துகின்றன. இந்த இயல்புகள் காப்பியங்கள் உள்பட எல்லாக் கவிதைகளிலும் காணப்படுவனவே. எனினும், இவைகள் சங்கச்செய்யுட்களில் மிகத் தெளிவாக விளங்குகின்றன. நேர்மையும், சுருக்கமும், தெளிவும் இச்செய்யுட்களின் முக்கியமான இயல்புகள். இவற்றில்வரும் காதல் நிகழ்ச்சிகளிலும் நேர்மையே காணப்படுகிறது. காதல் - நடிப்புகள் இவற்றில் இல்லை. அக்காலத்துப் புலவர்களது உள்ளம் அதியுக்தியால் மலினமடையவில்லை. ஆகவே, இயற்கைப்பொருள்களை நேரிற்கண்டு அனுபவித்துத் தம் கவிதைகளில் அமைத்தனர். சில இடங்களில் சாதாரண இயற்கைப்பொருளை மற்றொரு சாதாரண இயற்கைப்பொருளோடு ஒப்பிட்டனர். மழைநீரால் மாசு நீங்கித் தூயதாய்க்கிடக்கும் பாறை, ‘மாசறக்கழீஇய யானைபோல’ (குறுந்.13) உள்ளதாம். வேறுசில இடங்களில் சாதாரண இயற்கைக்காட்சியால் அரிய உண்மை விளக்கப்படுகிறது.

சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே *(குறுந்.18)*

சிறிய மரக்கிளையிலே பெரிய பழங்கள் தொங்கிக்கிடப்பது நாம் தினசரி அனுபவத்தில் காண்பதே. இக்காட்சியைப்போலத் தலைவியின் உயிரானது மிகச்சிறியதாம்; அதனிடத்தே முதிர்ந்து பழுத்துத்தொங்கும் காதற்கனியானது தாங்கமுடியாத பாரதத்தையுடையதாய்ப்

பெரிதாகியுள்ளதாம். மற்றும் சில இடங்களில் சாதாரணமாய்க் கவனிக்கப்படாத இயற்கையைப் புலவர்கள் கூர்ந்து அறிந்து தம் கவிதைகளில் அமைத்துள்ளார்கள். உதாரணமாக 'அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து' (நீர்முள்ளியின் முள் அணிலின் பல்லை ஒத்துள்ளது. குறுந்.49) எனக்கூறப்படுகிறது. இன்னும் சில இடங்களில் உவமானமும் உவமேயமும் பலரும் கண்டுள்ள பொருள்களேயாயினும், ஒப்புமைகாணுதற்கு அரியதாயிருக்கும். மனத்தேயுள்ள உணர்ச்சியொற்றுமையால் புலவர்கள் ஒப்புமையைக் கற்பித்துள்ளார்கள்.

பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்
குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே *(ஐங்குறு.232)*

வஞ்சி யன்னஎன் நலந்தந்து சென்மே *(அகம்.396)*

தொண்டி யன்ன பணைத்தோள்
ஒண்டொடி யரிவை *(ஐங்குறு.171)*

என்பன உதாரணங்கள். இவற்றுள் 'வஞ்சியன்ன என் நலந்தந்து சென்மே' என்றால், 'நீ கவர்ந்துகொண்ட எனது அழகு வஞ்சிமாநகரின் பேரழகுபோன்றது; அதனை எனக்கு மீண்டும் தந்துவிட்டுச் செல்வாயாக' என்பது கருத்து.

பூவுலகத்துப் பொருள்களேயன்றி, யாவர்க்கும் விளங்கி விண்ணுலகத்திலே தோன்றும் பொருளும் உவமத்திற்கு உரியதாகவே இப்புலவர்களால் கொள்ளப்பட்டது.

ஞாயி றனையை நின் பகைவர்க்குத்
திங்கள் அனையை எம்மனோர்க்கே. *(புறம்.114)*

'அரசே! உனது பகைவரைச் சூரியன்போலக் காய்ந்து தகித்தும், உனது நிழலில்வாழும் எங்கள்போல்வாருக்குச் சந்திரன்போலக் குளிர்ந்தும் நீ உள்ளாய்' என்னும் கருத்துப்பட இச்செய்யுளடிகள் அமைந்துள்ளன. இங்கே கூறியன கவிஞனது நேரடியான அனுபவத்தினின்றும் பிறந்தன.

இங்ஙனம் பிறவாது மரபுவழிப்பட்ட உவமைகளும் எடுத்தாளப்பட்டுள்ளன. 'குவளையுண்கண்' (அகம்.138. நற்.77), 'பொன்னேர் மேனி' (ஐங்குறு.388), 'முத்தேர் வெண்பல்' (ஐங்குறு.380),

'அவிரறல் கடுங்குங் கூந்தல்' (புறம்.25), 'ஆம்பல் நாறும் தேம்பொதி துவர்வாய்' (குறுந்.300) என்பவை உதாரணங்கள்.

அனுபவத்திற்கண்ட பொருள்களையேயன்றிக் கதைகளிற் கேட்கப்பட்ட பொருள்களையும் உவமமாக எடுத்தாளுதலில் இச்சங்கப்புலவர்கள் பின்வாங்கியதில்லை. 'இருதலைப் புள்ளின் ஒருயிரம்மே' (அகம்.12) என்பது உதாரணம்.

மேலே விவரித்த உவமை வகைகளை ஆண்ட முற்சங்ககாலத் திற்குப்பின், உவமைகளின் இயல்பு சிறிது விரிவுபெறலாயிற்று. இதிகாசம் முதலியவற்றினின்று வரலாறுகளை உவமப்பொருளாகக் கொண்டு, ஒப்புமைக்குணங்களைத் தொடர்ந்துகூறி, உவமேயத்தை மனத்தில் பதியவைப்பதற்குக் கவிஞர்கள் முயன்றார்கள். கலித்தொகையில்,

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கை கீழ்ப்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல
உறுபுலி உருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை
நீடிரு விடரகம் சிலம்பக் கூஉய்த்தன்
கோடு புய்க்கல்லா துழக்கும் நாடகேள். *(கலித்.38)*

என வருவது ஒரு தக்க உதாரணமாம். இங்கே வேங்கைமரத்தின் அடிமூலத்தை மதயானை தன் கொம்புகளால் குத்திப்பெயர்க்க முயன்றதில், அதன் கொம்பு ஆழத்தில் பாய்ந்து மீண்டும் அதனால் எடுக்கமுடியாத துன்பநிலைக்கு, இராவணன் இமையமலையை அடியோடு பெயர்த்தெடுக்க எண்ணி, அம்மலையின்கீழாகப் புகவிட்ட கரங்களை மீண்டும் எடுக்க முயன்று வருந்திநிற்கும் நிலை ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது.* இதுபோன்ற உவமைகள் பல. பரிபாடலிலும் இவ்வகையுவமைவிரிவுகள் பல பயின்று வருகின்றன.

இங்குக்குறித்தது உத்தரகாண்டத்திற் காணும் வரலாறு. இக்காண்டம் மிகப் பிற்பட்டதென்பது அனைவர்க்கும் ஒத்த முடிபு. இதன்கண் வரும் கதைகளைக்குறித்து முற்சங்கநூல்களில் யாதும் காண இயலாது. ஆகவே, கலித்தொகை பிற்சங்ககாலத்தது என்பதற்கு இவ்வுவமையும் ஒரு சான்றாம்.

இந்நிலையிலே நாம் காவியவுலகிற் பிரவேசித்துவிடுகிறோம். காவியம் என்ற அளவிலே கதை என்ற நூற்பொருளும் கலையுணர்ச்சி என்ற கதையை நிகழ்த்தும் அழகுநெறியும் மேம்பட்டுவிடுகின்றன. இதனால் பௌராணிக உவமையை அமைக்கும் பொழுது இடத்திற்குத்தக்கபடி சுருக்கிக்கூறவேண்டும் நியமம் ஏற்பட்டது. உதயணன் பெருங்கதையில் (உஞ்சை.53, 14-17)

கருவரை மிசைநின் றிருநிலத் திழிதரும்
உமையொடு புணர்ந்த இமையா நாட்டத்துக்
கண்ணணங் கவிரொளிக் கடவுள் போல
மத்தக மருங்கில் தத்துவனர் இழிதர

என வருகிறது. ‘மலையினின்றும் சிவபிரான் உமையோடு பூமியில் இழிந்ததுபோல’ என்பது உவமை. பௌராணிக உவமையைச் சுருக்கியபோதிலும் உவமை முதலிய பல அணிகள் தொடர்ந்து நிகழ்தலை இக்காவியக்கவிஞரும் விரும்பினர். எனவே இவ்வுவமையைத் தொடர்ந்து,

மருங்குற மண்மிசை வீழின் மற்றென்
இரும்புறத் திருந்தோர்க் கேதமென் றெண்ணி
மல்குநீ ருடுக்கை மண்ணக மடந்தையைப்
பாவடி நிலனுறப் பரப்பி உதயணன்
சேவடி தலையுறச் செய்தது பொறுவென
வணக்கஞ் செய்வது போல மற்றுத்தன்
அணிக்கேழ் பொறிச்செவி யாட லாற்றாது
செங்கேழ்த் துருத்தியின் அங்காந் துயிர்த்தொறும்
பைசொரி பவழம் போலப் படிதாழ்
கைசொரி யுதிரம் கான்றுவந் திழிதர

என மேற் கூறப்படுகின்றது. இங்கே யானை விழும்போது நிகழ்ந்த ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தொடர்ந்து உவமை முதலியன தரப்படுகின்றன. உவமான உவமேயங்கட்குரிய ஒப்புமைக் குணங்களைப் பலபட விரித்துக் கூறுதலும் முற்பட்ட காவியங்களில் காணப்படுகிறது.

நேரியற் சாயல் நிகர்தமக் கில்லாக்
காரிகை கடுநுனைத் தூண்டி லாக

உட்கும் நாணும் ஊரா ணொழுக்கும்
கட்கின் கோலமும் கட்டிரை யாக
இருங்கண் ஞாலத் திளையோ ரீட்டிய
அருங்கல வெறுக்கை யவை மீனாக
வாங்குபு கொள்ளும் வழக்கியல்

என்ற பெருங்கதையடிகள் (இலாவாண.7, 72-78) இதற்கு உதாரணமாம். இங்கே தூண்டிலிட்டு மீன்பிடிக்கும் செயல் விவரத்துடன் உவமையாகத் தொடர்ந்து அமைந்துள்ளது. தனித்தனி உவமைகளை அடுக்கிக் கூறுதலும் பெருங்கதையிற் காணலாம்.

அஞ்செந் தாமரை யகவித ழன்ன
சில்லரித் தடங்கண் மெல்லென மிளிர
மானின் மடப்பெடை மம்மர் எய்த
வேனிற் காலத்துத் தானம் நோக்கி
மணிக்கட் பீலி மாமயிற் பேடை
அணுக்கவின் மென்னடை யனுக்க அசைந்தசைந்து

என்ற அடிகள் (உஞ்சை.53, 149-154) சான்றாகும்.

இக்காவியத்திற்குப் பிற்படவந்தது சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்தின் ஆசிரியரான இளங்கோவடிகள் பெருங்கதை யாசிரியரைக் காட்டிலும் சிறந்த கவிஞர். இவர் கூற எடுத்துக்கொண்டதும் ஒருமைநயமும் சுருக்கமுடைய சிறந்த கதையாகும். பெருங்கதையைப் போலன்றித் தமிழ்நாட்டில் வழங்கிவந்த ஒரு பழங்கதை, "நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரமென் றோர் மணியாரம்" ஆகிய இவ் வழகிய காவியத்தில் உவமைகள் மிக்க அழகுபெறுகின்றன. பௌராணிக உவமைகள் ஒவ்வொன்றும் உள்ளத்தைக் கனிவிக்கும் அழகிய சித்திரமாக அமைந்து அவற்றின் நலன்களைப் பன்மடங்கு மிகுதிப்பட விளக்கி மனோபாவனையால் உவமேயங்களின் நலன்களை அழகுகனிந்து துளும்பும்படி செய்கின்றது.

குழவித் திங்கள் இமையவ ரேத்த
அழகொடு முடித்த அருமைத் தாயினும்
உரிதி னின்னோ டுடன்பிறப் புண்மையிற்
பெரியோன் தருக திருநுத லாகென *(2 மனையறம்.38-41)*

என்ற அடிகளில் பௌராணிகச் செய்தி சித்திரிக்கப்பட்டு ஒப்புமைப் பொருளாகிறது.

தொடர்ச்சி அடுத்த இதழில்

மரு

பேரா **செ.வை.சண்முகம்,**
மொழியியற்புலம் (ப.நி.),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.
கைபேசி : 98651 96476

சென்ற இதழின் தொடர்ச்சி

9.1.1. இளம்பூரணரின் உள் வகைகள்

'தகுதி என்பது மூன்று வகைப்படும். மங்கல மரபினாற் கூறுதலும், இடக்கரடக்கிக் கூறுதலும், குழுவின் வந்த குறிநிலை வழக்கும் என'.

உதாரணங்கள்:

மங்கல மரபு = செத்தாரைத் துஞ்சினார் என்றலும் சுடுகாட்டை நன்காடு என்றலும்.

இடக்கரடக்கல் = கண் கழீஇ வருதும், கண்குறியராய் இருந்தார், பொறை உயிர்த்தார்.

குழுக் குறி = பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றலும், வண்ணக்கர் காணத்தை நீலம் என்றலும்' என்பவை.

இங்கு மூலச்சொல், அதன் மாற்றுச்சொற்கள் என்று இளம்பூரணர் உதாரணம் அமைந்தாலும் இடக்கரடக்கலுக்கு மூலச்சொல் குறிப்பிடவில்லை என்று உணரத் தகுந்தது. அப்படியானால் ஏனைய இரண்டு வகைகளின் மூலச்சொல் ஒரோவழி வழக்கில் அமையும் என்று ஆவதைப் பிற உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

செத்தார், சுடுகாடு என்பது அமங்கலம் உடையவை என்று மாற்றுச் சொற்கள் மங்கலம் உடையவை ஆனாலும் ஒரோவழி வழக்கில் அமைபவை. அவை சமூகப்பண்பாட்டு உணர்வு சார்ந்தது

இடக்கரடக்கல் மூல சொல்லே வழக்கில் அமையவில்லை. சமூக உளவியல் சார்ந்தது.

குழுக் குறி என்பது ஒரு குழு கையாளும் கலைச்சொல் போன்றது. தமிழிலே இலக்கண வழக்கு, இலக்கிய வழக்கு மாறுபாடு அமைந்துள்ளது. உயிர், மெய் என்ற இரண்டு சொற்களும் இலக்கியத்தில் ஒரு பொருள், இலக்கணத்தில் ஒரு பொருள் உடையவை.

இலக்கிய வழக்குகள்: 'உயிர் வாழ்க்கை' (குறள் 78) 'உயிர் உடம்பு' (குறள்.330) 'மெய் தீண்டல்' (குறள்.65)

இலக்கண வழக்குகள்: 'ஔகார இறுவாய்ப்/பன்னீரெழுத்தும் உயிர்' (நூன்மரபு 8)

'னகார இறுவாய்ப் பதினெண் எழுத்தும் மெய்' (நூன்மரபு 8).

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் மங்கல மரபை மட்டுமே தகுதி என்று ஏற்றுக்கொண்டுள்ளார்கள். குழுவின் வந்த குறிநிலை வழக்கும் இடக்கரடக்கலும் அவர்கள் இருவரும் சேர்த்துக்கொள்ளாவிட்டாலும் சேனாவரையர் கருத்து நிலையில் மறுப்புத் தெரிவித்துள்ளார். இடக்கரடக்கலைப் பொறுத்த வரையில், 'அவையல் கிளவி' என்று (எச்சம் 46) 'மறைக்குங்காலை' (எச்சம் 47) எனவும் முன்னர் அமைக்கப்படுதலானும் மரூஉ முடிபு எழுத்ததிகாரத்துக் கூறப்பட்டமையாலும் அவர்க்கது அது கருத்து அன்று என்க' என்பது சேனாவரையர் வாதம். ஆனால் தொல்காப்பியக் கருத்துக்களைப் பொதுமைப்படுத்தும் மறுவருணனை என்று இளம்பூரணர் கருத்தைக் கொண்டால் சேனாவரையர் வாதம் சிறப்பாக அமையாது போய்விடும்.

உண்மையில் இளம்பூரணர் தொல்காப்பியம் தனித்தனியே கூறிய வகைகளை ஒரு கருத்தமைவுக்குள் பொதுமைப்படுத்திக் கொண்டுவர முயன்றதன் முயற்சியே மூன்று உள்வகைப் பாகுபாடு. இளம்பூரணருக்குப் பிறகு நன்னூல் முதலிய நூல்களில் அவை இலக்கணப் படுத்தப்பட்டுவிட்டன.

குழுவின் வந்த குறிநிலை வழக்கைப் பொறுத்த வரையில் 'சான்றோர் வழக்கின்கண்ணும் அவர் செய்யுட்கண்ணும் வாராமையின் அமைக்கப்படா' என்பது சேனாவரையர் கருத்து. உண்மையில் அந்தச் சமூகம் இலக்கியப் பொருளாகப் பயன்படுத்தாதலால் 'சான்றோர் வழக்கின் கண்ணும் அவர் செய்யுட் கண்ணும் வரவில்லை' என்று அமைதி கொள்ளலாம்.

9.2. வழக்கு

இளம்பூரணர் பொது விளக்கம் கொடுக்காமல் இங்கும் வகைப்படுத்தியே விளக்கியுள்ளார்.

சேனாவரையர் 'காரணம் இன்றி வழக்கற்பாடே பற்றி வருவது' என்பது விளக்கம். நச்சினார்க்கினியர் இதே கருத்தையே குறிப்பிட்டுள்ளார். மேலும் இளம்பூரணர், சேனாவரையர் ஆகிய இருவரின் உதாரணங்களும் மாறுபடுகின்றன.

9.2.1. இளம்பூரணர் வகை

'வழக்காறு இருவகைப்படும், இலக்கண வழக்கும், இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ வழக்கும் என. ஆனால்

உதாரணத்தை விளக்கும்போது இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ வழக்கு, மரூஉ வழக்கு என்று குறிப்பிட்டதோடு,

'வழக்காறு இத்துணை என்பது இல்லை; சிதைந்தும் சிதையாதும் பொருந்தி நடப்பன எல்லாம் அவை எனப்படும்'

என்று இறுதி வாசகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

'முன் என்பதனை முன்றில் என்று தலைதடுமாறிச் சொல்லுதல் இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ வழக்கு. இனி சோழநாடு என்பதனைச் சோணாடு என்பது மரூஉ வழக்கு' என்பவை இளம்பூரணரின் உதாரணங்கள்.

சேனாவரையர் பொது விளக்கம் கொடுத்து இளம்பூரணர் மங்கலத்துக்குக் கொடுத்த உதாரணங்களைத் 'தகுதி' என்று பொதுவகையாகக் கொடுத்ததோடு இடக்கரடக்கல் என்ற இளம்பூரணர் கூறிய உள்வகை, தொல்காப்பியம் குறிப்பிட்ட அவையல் கிளவி பற்றிய எச்சவியல் சூத்திரங்களில் விளக்கப்பட்டுள்ளதால் பொருந்தாது என்று வாதிட்டுள்ளார்.

'வழக்கு என்பது காரணம் இன்றி வழங்கப்பாடே பற்றி வருவது' என்று சேனாவரையர் பொதுநிலையில் விளக்கிப்

'பண்பு கொள் பொருள் பெயராயினும் பண்பு குறியாது சாதிப்பெயராய் வெள்யாடு, வெண்களமர், கருங்களமர் என வருவனவும் குடத்துள்ளும் பிற கலத்துள்ளும் இருந்த நீரைச் சிறிது என்னாது சில என்றலும் பிறவும் வழக்காறாம்' என்று உதாரணங்களைக் கொடுத்துள்ளார்.

உண்மையில் வெள்ளாடு கருப்பாக இருக்கும் ஒரு வகை ஆட்டைக் குறிப்பதால் வழக்கு என்பது சேனாவரையர் கருத்து. அது போலச் சிலருடைய இயற் பெயரும் அமைந்திருக்கும்.

'சில' என்பது எண்ணுப்பெயருக்கு உள்ள அடை, கெட்டிப்பொருளுக்கு உரியது. நீர் திரவப் பொருள் சிறிது என்று கூற வேண்டும் என்பதால் 'சில' என்ற வழக்குப் பொருந்தாது என்பது அவர் கருத்து. ஆனால் கல்லாடர், சேனாவரையர் கருத்தையும் உள்ளடக்கும் வகையில் 'சொற் சிதையச் சொல்லுவன அன்றி, படு பொருள் சிதையச் சொல்லுவனவும் மரூஉ வழக்கு என்று கொள்ளப்படும். 1. கரிய மயிரினைச் சிறு வெள்வாய் என்றும், 2. களமருட்கரியாரை வெண்களமர் என்றும், 3. புலைக் களமருட் செய்யாரைக் கருங்களமர் என்றும் 4.

நீரினையும் பாலினையும் ஒரோவழிச் சில பல வென்றும் 5. அடுப்பின் கீழ்ப்புடையை மீயடுப்பு என்றும் கூறுவன'

என்று விளக்கியுள்ளது அறியத்தகுந்தது. இவை 'படுபொருள் சிதையச் சொல்லும் சொல்லுக்கும்' மரூஉ வழக்குக்கும் உரியவை என்று ஆகிறது.

ஒரு நிலையில் எல்லாமே வழக்குதான். சில மாறுபட்ட வழக்குகளுக்கு மங்கலம், இடக்கரடக்கல் என்று காரணம் அறிய முடிவதுபோல வேறு சிலவற்றிற்குக் காரணம் கண்டறிய முடியவில்லை. சிறப்பு வழக்கு என்பதை 'வழக்கு' என்று தொல்காப்பியம் கூறியுள்ளதாகக் கருதலாம். அதைக் கல்லாடர் 'படுபொருள் சிதையச் சொல்லுவன' காரண விளக்கம் போல் குறிப்பிட்டுள்ளார் என்று கருதலாம்.

9.2.2. ஒப்பு நிலை உறழ்ச்சி

'இதற்கு இது தகுமோ எனப் பண்பினால் ஆதல், தொழிலின் ஆதல் உறழ நிற்பது' என்பது தெய்வச்சிலையாரின் 'தகுதி' பற்றிய விளக்கம். இந்தச் சூத்திரம் சினை, முதல் பற்றிய சூத்திரங்களை அடுத்து அமைந்துள்ளதால் 'சினைமுதற் கிளவியும் உறழ்பொருளும் அதிகாரத்தான் வந்தன' என்று குறிப்பிட்டுச் சினைமுதற் கிளவிகளை உதாரணங்களைக் கொடுத்துள்ளார்.

தகுதி பற்றி வினா - 'இந் நங்கை கண் நல்லவோ இக்கயல் நல்லவோ'. இங்கு 'கயல் போன்ற கண்' என்ற மரபை ஒட்டியது. உவமை என்ற முறையில் உவமானம் உவமேயம் என்று வேறுபடுத்தப்படும். பொதுவாகக் கயல் = உவமானம், கண் = உவமேயம். கயல் போன்ற கண் நல்லவோ என்ற ஒரு வாக்கியத்தைத் தான் 'கண் நல்லவோ கயல் நல்லவோ' என்று இரண்டு வாக்கியமாக்கிக் கருத்து அழுத்தம் தரப்படுகிறது. அவரே 'செப்பு வருமாறு கயலிற் கண் என்றாலும் ஒக்கும், என்றாலும் உரைப்பது' என்று விளக்குவதால் அது ஒரு வகை உவமை சார் மொழி நடை என்று ஆகிறது.

தண்டியலங்கார அணி இலக்கணம் (சூ. 32) குறிக்கும் உவமையில் 24 வகைகளில் 'ஒரு பொருளை ஒருகால் உவமையாகவும் உவமேயமாகவும் விளக்கும் இதரவிதர உவமை' என்று குறிப்பிட்டதை ஓரளவு ஒத்துள்ளது.

இதரவிதர உவமைக்கு உரிய உதாரணம் கயல் போல் களிக்கின்றன கண், கயலும் கண் போல் களிக்கிறது. 'வழக்காவது ஒப்புமை இன்றி உலகத்தார் பயில வருவது' என்பது.

வழக்கு பற்றிய வினா என்று 'கரிதோ வெளிதோ, இருப்பேனோ போவேனோ, ஊரோ காடோ, பகலோ இரவோ என்றும் தேவராய் வாழ்தல் நன்றோ, நரகத்துள் வாழ்தல் நன்றோ எனவும், பிறவும் ஒன்றினொன்று பொருத்தம் இன்றி உலக வழக்கின் வருவன கொள்க' என்று கொடுத்து விளக்கமும் அளித்துள்ளார்.

உண்மையில் இவைகளை முரண் சொற்களாகக் கருதலாம். முரண் பற்றிக் கருதாமல் இருப்பதை ஏற்றுக் கொள்கிற மனநிலையின் மொழிப்படுத்தும் என்று கொள்ளலாம். வழக்குதான் என்றாலும் கருத்தாடல் நோக்கில் சிறுசிறு பொருள் மாறுபாடும், பேசுவோரின் உணர்வு மாறுபாடும் அமைந்துள்ளன என்பது கருத்து. அதனால் மொழி அமைப்பு முழுவதும் தருக்க முறையில் அமைவது இல்லை என்று கருதப்படுகிறது.

10. பிற்காலக் கருத்து

இளம்பூரணர் கருத்தைத் தழுவி நன்னூல் (267) வழக்கு என்பதை இயல்பு, தகுதி என்று இரண்டாக வகுத்துப் பகுத்துக் கூறியுள்ளது.

'இலக்கணம் உடையது இலக்கணப் போலி
மரூஉ என்றாகும் மூவகை இயல்பும்
இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக் குறியும்
எனமுத் தகுதியோடு ஆறாம் வழக்கியல்' *(267)*

பிற்கால இலக்கணங்களான முத்துவீரியமும் (பெயர் 14-16) சுவாமிநாதமும் (36 பெயரியல்) இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளன.

11. முடிவுரை

தொல்காப்பியத்தின் மேலாண்மை பலவகைப்படும். 1. கோட்பாட்டு மேலாண்மை, இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக உணரப்பட்டு வருகிறது. எழுத்தியல், சொல்லியல், தொடரியல், பொருண்மையியல், கருத்தாடலியல் ஆகியவைகளோடு வேற்றியல் ஆய்வு (Contrastive study) நோக்கில் சில உண்மைகளைக் குறிப்பிட்டு அதன் உச்சகட்டமாக 'மொழிபெயர்ப்பு' என்பதை நூல்வகைகளாகச் சேர்ந்துள்ளது (மரபியல் 98) பரவலான வீச்சைப் புலப்படுத்துகிறது.

2. மொழி மேலாண்மை அதாவது அதன் மொழிநடை. இலக்கணமாக இருந்தாலும் அடி எதுகை/மோனை அமைந்துள்ளது என்பது உணரப்பட்டாலும், அதற்காகக் கையாண்ட உத்திகளும் முழுமையாகக் கண்டறியப்பட வேண்டும். அவைகளில் ஒன்று சொல் தேர்வு, இங்குக்

காட்டப்பட்ட சூத்திரங்களின் மூலம் புலனாகிறது. 'பிண்டப் பெயர்' என்பது முதல் அடி என்பதால் அடி எதுகைக்காகப் 'பண்டியல் மருங்கு' (வேற்றுமை மயங்கியல் 7) என்றும்; முன்னடியின் முதல் சொல் 'இல்லென் கிளவி' என்பதால் அடுத்த அடி' 'தொல்லியல் மருங்கு' (புள்ளி மயங்கு. 60.2,3) என்றும் அமைந்துள்ளது அடித் தொடையாக்க முறையும் மொழிநடை மேலாண்மையின் புலனாகின்றன.

3) தரவு மேலாண்மை. 'வழக்கும் செய்யுளும்' அடிப்படைத் தரவாகக் கொண்டது என்பது கருத்து பொதுவாக உணரப்பட்டுள்ளதே தவிர, வழக்கு மொழியில் அது குறிப்பிட்ட பல வகைகள் எடுத்துக் காட்டியதன் மூலம் புலனாகும் தரவு மேலாண்மை உணரப்பட வேண்டும். அவைகளில் ஒன்று, 'மரு' என்பது உண்மையில் அது பொதுக் கருத்தமைவாகக் கொள்ளத்தகுந்தது. அவையல் கிளவி, தகுதி ஆகியவை தனி வகை போல் தோன்றுவதை இளம்பூரணர் தகுதியின் கீழ் கொண்டு வந்துள்ளார். உண்மையில் மரு என்பதன் கீழ் கொண்டு வருவது சிறப்பாக இருக்கும்.

துணையன்கள்

கோபாலையர், தி.வே.2005, தமிழ் இலக்கணப் பேரகராதி பொருள் அணிI, தமிழ் மண் பதிப்பகம், சென்னை

சண்முகம், செ.வை.2010, குறள் வாசிப்பு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்

.... 2014, தொல்காப்பிய ஆய்வு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

சிவலிங்கனார், ஆ.தொல்காப்பியம் உரை வளம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

நன்னூல் மூலமும் விருத்தியுரையும் (ப-ர், தாமோதரன், ஆ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

பாலசுப்பிரமணியன், க. 2016, தொல்காப்பியச் சொற்பொருளடைவு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

மாதையன். பெ.2007. சங்க இலக்கியச் சொல்லடைவு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை

DED (A Dravidian Etymological Dictionary) Burrow, T & Emeneau M.B. Oxford/

வீரசோழியம்

பேராசிரியர் **ப.மருதநாயகம்**
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல்
தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை 600113.
கைபேசி : 9442787727

வீரசோழியம் வடமொழிச் சார்புடையதா?

வீரசோழியப்பாயிரத்தின் மூன்றாம் பாடல்,

நாமேவு எழுத்துச்சொல் நற்பொருள் யாப்பலங்காரமெனும்
பாமேவு பஞ்ச அதிகாரமாம் பரப்பைச் சுருக்கித்
தேமேவிய தொங்கல் தேர்வீரசோழன் திருப்பெயரால்
பூமேல் உரைப்பன் வடநூல் மரபும் புகன்று கொண்டே

என்று ஆசிரியரின் நோக்கத்தைத் தெரிவிக்கும். ஐந்திலக்கணங்களைப் பற்றிப் பேசப்போவதாகவும், அவற்றைச் சுருக்கித் தரப்போவதாகவும் அவர் அறிவிப்பதும் பொருள் இலக்கணத்தை 'நற்பொருள்' என்று அடைகொடுத்துக் கூறுவதும் அவர் பின்பற்றப்போவது தொல்காப்பிய மரபேயன்றி வடமொழிப் பாணினீய மரபன்று என்பதைப் புலப்படுத்தும். 'வடநூல் மரபும் புகன்று கொண்டே' என்று சொல்லும்போது தமிழிலக்கணத்தை விளக்கும்போது ஆங்காங்கே வடமொழி இலக்கண மரபையும் சுட்டிக்காட்டுவேன் என்று சொல்லுகின்றாரே தவிர, தமிழ் இலக்கணம் வடமொழி இலக்கணத்தைத் தழுவியது என்றோ, தமிழ் இலக்கணத்திற்கு உள்ள குறைகளை வடமொழி இலக்கணம் மூலமாக நிறைவு செய்து காட்டப்போகிறேனென்றோ, தமிழ் இலக்கணக் கலைச்சொற்களை விட வடமொழி இலக்கணக் கலைச்சொற்கள் சிறந்தவையென்றோ கூறவில்லை. நூலெங்கிலும் அத்தகைய முயற்சியை அவர் மேற்கொள்ளவும் இல்லை.

I

வீரசோழியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அலங்காரம் என்னும் ஐந்து பகுதிகளைக் கொண்டு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைக் கூறுகின்றது. எழுத்ததிகாரத்திலுள்ள "சந்திப்படலம்"

28 நூற்பாக்களில் (1) உயிர், மெய், உயிர் மெய்யெழுத்துகள் (2) வல்லினம், மெல்லினம், இடையினம் (3) குற்றெழுத்து, நெட்டெழுத்து (4) வினாவெழுத்து, சுட்டெழுத்து (5) மாத்திரைகள் (6) எழுத்தொலிகள் பிறத்தல் (7) மொழிக்கு முதலாகிய எழுத்துகள் (8) மொழிக்கு ஈறாகிய எழுத்துகள் (9) புணர்ச்சி விதிகள் ஆகியவற்றை விளக்குகிறது. சொல்லதிகாரத்திலுள்ள "வேற்றுமைப்படலம்" ஒன்பது நூற்பாக்களில் எழுவாய் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, விளி வேற்றுமை ஆகிய எட்டு வேற்றுமைகளை வரையறை செய்கிறது. "உபகாரகப்படலம்" ஆறு நூற்பாக்களில் ஆறு காரக பதங்கள் பற்றியும் அவை இருபத்து மூன்றாய் விரிவது பற்றியும் குறிப்பிடுகின்றது. கருத்தாக்காரகம் (தொழிலைச்செய்வான்), கரணக்காரகம் (தொழிலினைச் செய்தற்குக் கருவி), கருமக்காரகம் (செய்யப்பட்டது), அவதிக்காரகம் (யாதொன்றினின்றும் ஒரு பொருள் நீங்குவது), ஆதாரக்காரகம் (தொழில் செய்தற்கு இடமானது), கோளிக்காரகம் (ஒரு பொருளைக் கொள்வான்) என்னும் பெயர்கள் அளிக்கப்பட்டுள்ளன. இருபத்து மூன்று காரக பதங்களிலும் வேற்றுமைப் பிரத்தியங்கள் மயங்கி வருதலும் கூறப்படுகிறது. "தொகைப்படலம்" எட்டு நூற்பாக்களில் வேற்றுமைத்தொகை, உம்மைத்தொகை, வினைத் தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, அன்மொழித்தொகை என்னும் ஆறு தொகைகளைச் சுட்டுகிறது.

"தத்திதப்படலம்" எட்டு நூற்பாக்களில் கீழ்க்கண்ட கருத்துகளைச் சொல்கிறது:

> அன், இயன், ஈனன், இகன், ஏயன், வான், வதி, அம், இவள், உ, அ, ஆன், ஆளன், மான், அகன் முதலிய பிரத்தியங்களும் சு என்பதும் தத்திதப் பிரத்தியங்களாம்.
>
> மை, அம், பு, து, வு, துகம், வல், அளவு என்பனபோன்ற பிரத்தியங்கள் குணக்குறிப்பை விளக்குதற்பொருட்டு வரும்.
>
> அச்சி, ஆட்டி, அனி, ஆத்தி, அத்தி, தி, ஆள், அள், இ, இச்சி, சி முதலாகிய பிரத்தியங்கள் பெண்மையை விளக்கும் பிரத்தியங்கள்.
>
> வனிதா - வனிதை; தாரா - தாரை; உமா - உமை; மாலா - மாலை
> சாலா - சாலை; தேவதா - தேவதை; கலா - கலை;
> சீதா - சீதை; நதீ - நதி; குமரீ - குமரி.

வடமொழியை வைத்துத் தமிழாக்குமிடத்து இவ்விலக்கணத்தால்
ஆதேச மாவனவாகத் தமிழ் ஒழிந்தவற்றை அழிக்க.
ஆரியம், வடுகு, தெலுங்கு, சாவகம், சோனகம், சிங்களம், பப்பரம்
இவை முதலாகிய பிறதேயச் சொற்களையும் தமிழாக்குமிடத்து
இவ்விலக்கணத்தானே முடிக்க.

"தாதுப்படலம்" பதினொரு நூற்பாக்களில் தாதுக்களைத் தமிழ்த்தாது, வடமொழித்தாது, திசைச்சொல்தாது என்று மூன்று வகைகளாகப் பிரித்துப் பேசுகிறது.

தமிழ்த்தாதுக்கள் நட, அடு, செய், பண்ணு என்னும் இவை
முதலாக வரும்.
முப்பத்துமூன்று தாதுக்களாவன; நட, அடு, செய், பண்ணு,
நண்ணு, போ, சிந்தி, நவில், உண்ணிரு, கிட, விட, கூறு.

திசைச்சொல் தாதுக்கள் நொடி, கோடி என்னும் சொற்கள் ஒப்ப முன்னிலையில் ஏவற்பொருள்மேல் ஒருமைச் சொல்லாய் வடமொழி, தமிழ்ச்சொற்களினின்றும் வேறாய்வரும்.

வகர ஒற்றுப்பெற்று எதிர்காலத் தடைப்பிரத்தியமும், தகர ஒற்றுப்பெற்று இறந்தகாலத் தடைப் பிரத்தியமும், ககர ஒற்றுப்பெற்று நிகழ்காலப் பிரத்தியமுமாம்.

நடவான் நடவான் நடவார் நடவார் நடவார்கள்
நடந்திலன் நடந்திலள் நடந்திலர்
நடக்கிலன் நடக்கிலர் நடக்கிலது

"கிரியா பதப்படலம்" பதின்மூன்று நூற்பாக்களில் முப்பத்தாறு கிரியா பதங்களைப்பற்றி எடுத்துரைக்கின்றது.

தான், ஆன், தாள், ஆள், தார், ஆர் - இறந்தகாலப் படர்க்கைக் கிரியா பதங்கள்.

நில் என்னும் தாதுவினின்று இறந்தகாலப் படர்க்கையின் நின்றான் முதலிய பிரத்தியங்கள் முடிந்தாங்குக் கிட, இரு என்னும் தாதுக்களினின்றும் கிடந்தான், இருந்தான் முதலிய பிரத்தியங்கள் நிகழ்காலப் பொருளில் வரும்.

சொல்லதிகாரத்தின் இறுதி நூற்பாக்கள் இரண்டும் தொல்காப்பியரும் அவிநயனாரும் சொல்லாராய்ந்த முறையைப் பட்டியிலிட்டுக்காட்டும்.

வேற்றுமை எட்டும் திணை இரண்டும் பால் ஐந்தும்
மாற்றுதற் கொத்த வழுவேழும் ஆறொட்டும்
ஏற்றமுக் காலம் இடம் மூன்றோடு இரண்டிடத்தால்
தோற்ற உரைப்பதாம் சொல்.

திணைபால் மரபு வினாச் செப்பிடம் சொல்
இணையா வழுத்தொகையோடு எச்சம் அணையாக்
கவினைய பார் வேற்றுமையும் கால மயக்குங்கொண்டு
அவினயன் ஆராய்ந்தார் சொல்

பொருளதிகாரத்துப் "பொருட்படலம்" பொருளை அகப்பொருள், அகப்புறப்பொருள், புறப்பொருள், புறப்புறப்பொருள் என்று நான்கு வகைப்படுத்தும்.

முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் எனும் ஐந்து
நிலங்களும் அகப்பொருளுக்கு அடையாளம்.
சுரநடை, கைக்கிளை, முதுபாலை, இல்லாண்முல்லை, தபுதாரம்,
தாபதம், வள்ளி, காந்தள், குறுங்கலி, பாசறை, முல்லை, குற்றிசை,
பெருந்திணை - இவை அகப்புறம்.
வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை
இவை புறம்.
வாகை, பொதுவியல், பாடாண் - இவை புறப்புறம்
புகட்சி, பரவல், குறிப்பு, கொடிநிலை, கந்தழி, வள்ளி - இவை
ஆறும் பாடாண்பகுதி விகற்பம்.
(புகட்சி - புகழ்
குறிப்பு - நன்மை வேண்டித் தெய்வத்தை வழிபடும் என்பது
கொடிநிலை - கொடியது தன்மை கூறுவது
கந்தழி - செவிற்றெட்பமுடைமை
வள்ளி - முருகவேளைக் குறித்தது)
அறமும் அறக்காரணமும் - அகப்பொருள்
பொருளும் பொருட்காரணமும் - புறப்பொருள்
இன்பமும் இன்பக் காரணமும் - அகப்புறப்பொருள்
எனவும் மூன்று வகைப்படுத்துவர்.

யாப்பதிகாரத்து "யாப்புப்படலம்" யாப்பின் கூறுகள், வகைகள் பற்றிக் கீழ்க்கண்டவாறு பட்டியலிடும்:

அசை - நேரசை, நிரையசை

சீர் - முதற்சீர், இடைச்சீர், கடைச்சீர்

அடி - ஐந்து வகை; குறளடி (இரண்டு சீர்), சிந்தடி (மூன்று சீர்), அளவடி (நான்கு சீர்), நெடிலடி (ஐந்து சீர்), கழி நெடிலடி (ஆறுசீர்) மோனை, எதுகை வகைகள்

பாக்கள்: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா

இனங்கள்: தாழிசை, துறை, விருத்தம்

வெண்பா வகைகள்: குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை வெண்பா

கலிவெண்பா - நேரிசை வெண்பாப்போன்று அதனின் நீண்டு வருவது.

ஆசிரியப்பா வகைகள்: நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா.

கலிப்பாவின் ஆறு உறுப்புகள்: தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம்.

கலிப்பாவின் வகைகள்: வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பா, நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப்பா.

வஞ்சிப்பா வகைகள்:

பத்தியக்கவியின் ஏழு வகைகள்: குறள், சிந்து, திரிபாதி, வெண்பா, திலதம், விருத்தம், சவலை.

கலித்துறை: கட்டளைக் கலித்துறை, காப்பியக் கலித்துறை.

கட்டளைக் கலித்துறை: கோவைக்கலித்துறை, திலதக்கலித்துறை.

யாப்புப்படலத்தின் இறுதி நூற்பா தொல்காப்பியர் கூறும் இருபது வண்ணங்களைக் குறிப்பிடுகிறது.

மெல்லிசை ஏந்தல் ஒழுகு உருட்டு எண்ணொரு வே முடுகு
வல்லியல் பாவகப் பாட்டு நலிவகைப் போடியையபு
சொல்லிய சித்திரம் தாவு புறப்பாட்டு அளபெடையும்
வல்லிசை தூங்கல் நெடுஞ்சீர் குறுஞ்சீர் இவை வண்ணமே

இவ்விருபது வண்ணங்களையும் விளக்கும் உரையாசிரியர் "வண்ணம் நூறென்பாரும் உளர். அவை வந்தவழிக் கண்டு கொள்க" என்று முடிப்பார். இந்நூற்பாவிற்கான அடிக்குறிப்பில் சி.வை.தாமோதரம் பிள்ளை,

வண்ணம் தொகையால் ஐந்தும் வசையால் இருபதும் விரியால் நூறும் என்ப. தொல்காப்பியர் முதலானோர் இருபதென வகுத்தனர். கையனார் அவினையனார் முதலானோர் நூறென விரித்தனர். நூறாமாறு:

தூங்கேந் தடுக்கல் பிரிதன் மயங்கிசை சொற்றவற்றைப்
பாங்கே அகவல் ஒழுகல் வலிமெலி பாற்படுத்தி
ஓங்கோர் குறில் நெடில் வல்லின மெல்லின மோடு இடையைத்
தாங்கா துறழ்தரத் தாம் வண்ணம் நூறுந் தலைப்படுமே

என்றெழுதுவார்.

II

அலங்கார அதிகாரத்தின் அலங்காரப்படலம் உவமை, உருவகம், மெய்ப்பாடு, எட்டுவகை மணங்கள் ஆகியவை பற்றி விரிவாகப்பேசும். இப்படலத்தில் இரண்டு நூற்பாக்கள் தண்டியின் பெயரைக் குறிப்பிடுகின்றன.

உரை உடலாக வுயிர் பொருளாக உரைத்த வண்ண
நிரை நிறமா நடையே செலவா நின்ற செய்யுட் களாம்
தரைமலி மானிடர் தம்மலங் காரங்கள் தண்டி சொன்ன
கரைமலி நூலின்படியை உரைப்பன் கனங்குழையே (1)

இதற்கு உரையாசிரியர், "சொல்லே உடலாகவும் பொருளே உயிராகவும் வண்ணங்களே நிறமாகவும் நடையே செலவாகவும் நின்ற செய்யுட்கள் என்னும் மானிடவர் ஆபரணங்களைப் பெயர் வேறுபாடு உணர்த்துதற்குத் தண்டியார் சொன்னபடியே இலக்கணம் சொல்லுவன்" என்று விளக்கம் தருவார்.

ஒப்பார் பொருளே உயிரானமையின் உரைத்தவற்றைத்
துப்பார் அலங்காரமாகத் தொகுக்கச் சொல்லும் பொருளும்
செப்பார் தரமுற்றி லேயலங் காரம் திகழ்வதன்றேல்
தப்பார் தருமென்று கண்டுரைத்தார் பண்டு தண்டிகளே. (7)

என்பது இன்னொரு நூற்பா. இதனை உரையாசிரியர்,

பொருளையே பிராணனாகக் கொண்டாராகலின் மேற்சொல்லப்பட்ட பிராணன்களையே அலங்காரம் என்பது இந்நூலுடையார்க்குத் துணிவு. இது தண்டியார் சொன்னபடியே

சொல்லுவன் என்று எடுத்துக்கொண்ட மேற்கோளோடு மாறுகொள்ளும் எனில் அலங்காரங்களை அல்லாது பிராணன்களை அவர் சொன்னபடி சொல்லுவன் என்னாமையால் மாறு கொள்ளாதென மறுக்க. இனி இளகியிருந்த சொல்லும் பொருளும் இன்றி முற்றிய பொழுதே அலங்காரங்கள் விளங்குவதென்பது தண்டியார்க்கும் உடன்பாடாம்" என்று விளக்கக் காணலாம்.

விதர்ப்பரும் கவுடரும் வேறுபடுவதை ஒரு நூற்பா சுட்டும்.

ஈண்டும் சிலீட்டம் உதாரதை காந்தி புலன் சமதை
தூண்டும் சமாதி பொருள் தெளிவு ஓகம் சுகுமாரதை
ஈண்டும் இன்பத்தொடு பத்து ஆவியென்னும் விதர்ப்பன் கௌடன்
வேண்டும் இவற்றை விபரீதமாக விளங்கிழையே. (6)

ஆனால் காந்தியென்னும் அலங்காரத்தை விளக்கும் நூற்பா அது தமிழில் வழங்குமாற்றையும் விதர்ப்பர், கவுடர் ஆகிய இருசாரார்க்கும் ஏற்புடைத்தாகும் என்பதையும் தெரிவிக்கும்.

ஆனா அழகினைக் காந்தியென்கின்றது அது தமிழின்
நானா விதமாய் நடைபெற்றியலும் நனிபுகட்சி
தானா மிடத்தினும் வார்த்தையின் கண்ணும் தலைசிறந்து
தேனாய் விதர்ப்பருக்கும் கவுடர்க்கும் திறப்படுமே. (9)

இதனை உரையாசிரியர்,

காந்தியென்னும் அலங்காரம் யாப்பு வனப்பெனக்
கொள்க. அது தமிழில் பல கூறுபாடு பெற்றுப் புகட்சியினும்
வார்த்தையினும் உலகிறந்த நன்பொருள் பொலி
வானின்று விதர்ப்பர்க்கும் கௌடர்க்கும்
நெறிப்பட்டியலும் என்றவாறு. ஒழிந்த அலங்காரங்களோ
வெனில் அவ்வப்பெயராலே தம்பொருள் விளங்கி
யிருக்கும் எனக்கொள்க.

என்று தெளிவுபடுத்துவார்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

செயர் வாய்பாட்டு வினைகள்

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்,**
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு, அசோக்நகர்,
புதுச்சேரி - 605008
கைபேசி : 9443151044

செயர் வாய்பாட்டு வினைகள் செவ்வியல் தமிழில் அதாவது சங்க இலக்கியம் தோன்றிய தமிழில் அரிதாகக் காணப்படுகின்றன. இந்த வினைகள் செயவென் எச்சப் பொருண்மையையும் வியங்கோட் பொருண்மையையும் உணர்த்துவனவாக நிகழ்கின்றன. இந்த வகையில் பின்வரும் எடுத்துக்காட்டுக்களைக் கருத்தில் கொள்க.

1. எறியர் ஒக்கிய சிறுசெங் குவளை (பதி.52.22) 'எறிய/எறிவதற்கு ஓங்கிய சிறு செங்குவளை'
2. மிகப்பொலி யர்தன் சேவடி (புறம்.387.14) 'தன் சேவடி மிகப் பொலிக'
3. அருந்தொழின் முடியரோ திருந்துவேற் கொற்றன் (புறம்.171.7) 'திருந்துவேற் கொற்றனின் அரிய தொழில் முடிக.'
4. தேயர்என் உயிர் (நற்.197.4)
5. ஐயந் தெளியரோ நீயே (அகம்.303.14) 'நீ ஐயம் தெளிக'.

இந்த எடுத்துக்காட்டுகளில் எறியர் என்பதே செயவென் எச்சப் பொருண்மையையும் **பொலியர், முடியர், தேயர், தெளியர்** ஆகியவை வியங்கோற் பொருண்மையையும் உணர்த்துகின்றன. செயர் வாய்பாட்டு வினைகளைப்பற்றி ஏதும் தொல்காப்பியர் குறிப்பிடவில்லையாயினும் செய்யியர் வாய்பாட்டு வினைகள்பற்றி அவர் குறிப்பிடுகிறார். **செய்து, செய்பு, செய்யூ, செய, செய்யிய, செய்யியர், செயின், செயற்கு, செய்தென** ஆகிய ஒன்பது வகை வினையெச்சங்களுள் செய்யிய, செய்யியர் வாய்பாட்டு வினையெச்சங்களையும் தொல்காப்பியர் உட்படுத்துவார். (சொல்.சேனா.228). ஆனால் இந்த வாய்பாட்டு வினைகள் வியங்கோள் வினைகளாகவும் செயல்படும் என்பதை அவர் குறிப்பிடவில்லை. இந்த இரண்டு வாய்பாட்டு வினைகளும் வல்வினை

சார்ந்த செய, செயர் வாய்பாட்டு வினைகளை அடிநிலை வடிவங்களாகக் கொண்டவையாகும். இந்த வினைகள் இகர அகரவீற்று வினையடிகளையும் யகர மெய் மற்றும் ஐகாரவீற்று வினையடிகளையும் கொண்டவையாகும். செய்யிய, செய்யியர் வாய்பாட்டு வினைகளின் தோற்றம் பின்வருமாறு விளக்கப்படும்.

6 (1) (1) *குடிய்க்க > குடிக்க (ய் >ϕ)
(2) (1) *குடிய்க்க > குடிய்க்க்கய (ய்க்க் > ய்க்க்ய்)
(2) குடிய்க்க்ய > குடிய்க்கிய (ய்க்க்ய்> ய்க்க்இய =ய்க்கிய)
(3) குடிய்க்கிய > குடிக்கிய (ய்க்கிய > க்கிய)

7 (1) (1) *குடிய்க்கர் > குடிக்கர் (ய் >ϕ)
(2) (1) *குடிய்க்கர் > குடிய்க்க்யர் (ய்க்க் > ய்க்க்ய்)
(2) குடிய்க்க்யர் > குடிய்க்கியர் (ய்க்க்ய்> ய்க்க்இய= ய்க்கிய)
(3) குடிய்க்கியர் > குடிக்கியர் (ய்க்கிய > க்கிய)

குடி என்னும் வினையடி இந்த ஆய்வில் ***குடிய்** என அகமீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த மீட்டுருவாக்க வடிவம் இல்லையென்றால் **குடிக்கிய** என்ற வினையமைப்பில் நிகழும் யகரத்தினை விளக்கமுடியாது. குமரி மாவட்டக் கிளைமொழிகளில் இயல்பாக நிகழும் **குடிக்ய, குடிக்கிய, குடிக்கியான்** (=குடிக்கான், குடிக்கிறான்) முதலிய வினையமைப்புகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இகரவீற்று வினையடியின்மீது தோன்றி நிகழும் **குடிக்கிய, குடிக்கியர்** ஆகிய வினைவடிவங்களைப் பின்வரும் புணர்ச்சி விதிகளைக்கொண்டும் வருவிக்க வாய்ப்புள்ளது.

8 (1) *குடிய்க்க(ர்) > குடிக்க்ய்அ(ர்) (ய்க்க் > க்க்ய்)
(2) குடிக்க்ய்அ(ர்) > குடிக்க்இய்அ(ர்) (க்க்ய் > க்க்இய்=க்கிய்)
(3) குடிக்க்இய்அ(ர்) = குடிக்கிய(ர்)

மேலே (7)-இல் நிகழ்த்திய ஆய்வில் அகமீட்டுருவாக்கம் செய்யப்பட்ட ***குடிய்** என்ற வினையடியில் நிகழும் யகரமெய் படியெடுக்கப்பட்டுள்ளது. இதனால் கூடுதலாக ஒரு புணர்ச்சிவிதி தேவைப்படுகிறது. ஆனால் (8)-இல் நிகழ்த்திய யகரமெய் இடம் பெயர்வதால் கூடுதல் புணர்ச்சி விதிக்கு வாய்ப்பில்லை. எண்ணிக்கை கூடுதலாகிறது. எனினும் குமரித்தமிழில் இன்னொரு கிளைமொழியில் **குடிக்கிய** என்ற

வினைவடிவம் **குடிச்சிய** எனத் திரிந்தும் வழங்கும் நிலை காணப்படுகிறது. இந்த வினைவடிவத்தில் **-க்க்-** என்ற மெய்ம்மயக்கம் **-ச்ச்-** என இடையண்ண வல்லுரசொலிகளாகத் (Mid Palatal Affricates) திரிகிறது. இந்தத் திரிபு யகர மெய்யின் தாக்கத்தால் நிகழ்வதாகும். இந்த வகையில் **-க்க்-** > **-ச்ச்-** என்ற திரிபு ஒன்று **-ய்க்க்-** என்பதன் வெளிப்பாடாக இருக்கவேண்டும்; அல்லது **-க்க்ய்-** என்பதன் வெளிப்பாடாக இருக்கவேண்டும். தமிழில் ஏற்கெனவே **-ய்த்த்-** என்ற மெய்ம்மயக்கம் **-ய்ச்ச்-** எனத் திரிந்து வழங்கும் நிலையும் காணப்படுகின்றது. எ-டு. ***குடிய்த்து** > **குடிய்ச்சு** > **குடிச்சு,** மேய்த்து > மேய்ச்சு, வளய்த்து > வளய்ச்சு. இந்தத் திரிபானது பொதுப் பேச்சுத் தமிழில் நிகழ்வதாகும்.

ஆயினும் **-ய்க்க்-/-க்க்ய்-** > **-ய்ச்ச்-/-ச்ச்ய்-** என்ற திரிபு ஒரு குறிப்பிட்ட பேச்சுக் குழுமத்திற்கு (Speech Community) அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பேச்சுக் குழுமங்களை உள்ளடக்கிய பேச்சுப் பரப்பிற்கு (Speech Area) மட்டுமே உரியது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே **-ய்க்க்-** என்ற மெய்ம்மயக்கம் அந்தக் குறிப்பிட்ட பேச்சுக்குழுமத்தில் அல்லது பேச்சுப்பரப்பில் மட்டுமே **-ய்ச்ச்-** எனத் திரிவதால் குழப்பம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. அகமீட்டுருவாக்கம் செய்யப்பட்ட இகரவீற்று வினையடிகளின்மீது தோன்றும் வினைவடிவங்களில் **-ய்ச்ச்-** என்ற திரிபு மெய்ம்மயக்கம் புறவடிவத்தில் (Surface Representation) இழப்பதாகக் கருதலாம். யகரவீற்று வினையடிகளிலும் ஐகாரவீற்று வினையடிகளிலும் நிகழும் யகர மெய்யும் குமரிக்கிளைமொழிகளில் வீழ்ந்துபடும் நிலையே காணப்படுகிறது. எ-டு. **தேய்க்கிய** › **தேய்ச்சிய** › **தேச்சிய, வளய்க்கிய** › **வளய்ச்சிய** › **வளச்சிய.** இந்த எடுத்துக்காட்டுக்களில் தேச்சிய, வளச்சிய ஆகியவை புறவடிவங்களாகும்.

9 (1) மேய்க்க(ர்) (இலக்கிய வழக்கு)

(2) மேய்க்க(ர்) > மேய்க்க்ய்அ(ர்) (ய்க்க் > ய்க்க்ய்)

(3) மேய்க்க்ய்அ(ர்) > மேய்க்க்இய்அ(ர்)

(ய்க்க்ய்>ய்க்க்இய் = ய்க்கிய்)

(4) மேய்க்க்இய்அ(ர்) = மேய்க்கிய(ர்)

இந்த விதிகள் **மேய்க்க/மேய்க்கர், மேய்க்கிய/மேய்க்கியர்** ஆகிய வினைவடிவங்களை வருவிக்கின்றன.

10 (1) விதய்க்க(ர்) =விதைக்க(ர்)

(2) விதய்க்க(ர்) > விதய்க்கய்அ(ர்) (ய்க்க் > ய்க்க்ய்)

(3) விதய்க்க்ய்அ(ர்) > விதய்க்க்இய்அ(ர்)

(ய்க்க்ய் >ய்க்க்இய் =ய்க்கிய்)

(4) விதய்க்கஇய்அ(ர்) = விதைய்க்கிய(ர்)

இந்த விதிகள் **விதைக்க/விதைக்கர், விதைக்கிய/விதைக்கியர்** ஆகிய வினைவடிவங்களை வருவிக்கின்றன.

செவ்வியல் தமிழில் வல்வினை சார்ந்த செய்யியர் வாய்பாட்டு வினைகளின் நிகழ்ச்சி உறுதிப்படுத்தவேண்டியுள்ளது. ஆயினும் **குடிக்கிய** (குறு.356.4), **மேய்க்கிய** (நாலா.நம்.திருவாய்.10.3.5) ஆகிய செய்யிய வாய்பாட்டு வினைவடிவங்கள் செயவென் எச்ச வினைகளுக்கு நிகராகப் பதிவாகியுள்ளன. ஒப்புமையாக்கத்தின் தாக்கத்தால் **கொடு, கேள், கல், சேர், தாழ்** முதலிய வினைகளின் அடியாகக் **கொடுக்கிய/கொடுக்கியர், கேட்கிய/கேட்கியர், கற்கிய/கற்கியர், சேர்க்கிய/சேர்க்கியர், தாழ்க்கிய/தாழ்க்கியர்** முதலிய வினைவடிவங்கள் தோன்றி நிகழ வாய்ப்புள்ளது. **தாழ், வீழ், நிறு** ஆகிய வினையடிகள் செவ்வியல் தமிழில் வல்வினைகளாக நிகழ்கின்றன. எ-டு. **ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த**, பகழி (நற்.13.3,4), **வீழ்க்கும்** (கலி.97.17, புறம்.104.3, 109.6), **புனைபுணை ஏறத் தாழ்த்ததை** (பரி.6.68), **வாழ்த்தினேம் பரவுதும் தாழ்த்துத்தலை** (பரி.9.83), **நில்லென்றே நிறுத்தான்** (கலி.55.6), **பேணி நிறுத்தார் அணி** (கலி.104.28), **நிறுக்கும்** (கலி.33.22), **புகுத்தனர் தொழூஉ** (கலி.104.17). இந்த வினையமைப்புகளின் வினையடியிலிருந்து **வீழ்க்கிய(ர்), தாழ்க்கிய(ர்), நிறுக்கிய(ர்), புகுக்கிய(ர்)** ஆகிய செய்யிய(ர்) வாய்பாட்டு வினைவடிவங்கள் தோன்றி நிகழவும் வாய்ப்புள்ளது. இடைக்காலத் தமிழிலும் வல்வினை சார்ந்த செய்யிய வாய்பாட்டு வினையெச்சங்களும் அவற்றினடியாகத் தோன்றிய வினைமுற்றுக்களும் பதிவாகியுள்ளன. எ-டு. **அளக்கிய** (சீ.சி.2593) (<*அளய்க்கிய) 'அளக்க', **விளைக்கிய** (சீ.சி.2867) (=விளய்க்கிய 'விளைக்க', **காக்கிய** (க.ரா.7555) (<*காய்க்கிய) 'காக்க', உகுக்கிய (சீ.சி.2636) 'உகுக்க', எடுக்கிய (சீ.சி.65) 'எடுக்க', **கேட்கிய** (சீ.சி.397) 'கேட்க', **விடுக்கிய** (சீ.சி.3034) 'விடுக்க'. இவற்றுள் **அளக்கிய, விளைக்கிய, காக்கிய** ஆகிய முதல் மூன்று வினைவடிவங்களைத்தவிர ஏனையவை ஒப்புமையாக்கத்தின் தாக்கத்தால் தோன்றியவையாகும். இக்கால ஈழத்தமிழிலும் நெல்லை-குமரித் தமிழிலும், இத்தகைய வினையமைப்புகளும்

வினைமுற்றுக்களும் காணப்படுகின்றன. எ-டு. **உரிக்கிய** (வ.கு.1986:112) 'உரிக்க', **குடுக்கியார்** (வ.கு.1986:11) (=குடுக்கார்) 'கொடுக்கிறார்', **ஒதக்ய** (வ.நி.1979:10) (=ஒதக்கிய) 'உதைக்க', **நெனக்ய** (வ.நி.1979:58) (=நெனக்கிய) 'நினைக்க', **விக்யது** (ஹெப்.1964:73) / **விக்கியது** (ஹெப். 1964:72) 'விற்கிறது/ விற்பது', **பாக்யது** (ஹெப்.1964:173) (=பாக்கியது) 'பார்க்கிறது/பார்ப்பது.'

மெல்வினைகளைப் பொறுத்தவரை **காணிய/காணியர், சொல்லிய/சொல்லியர், ஆடிய/ஆடியர், தரீஇய/தரீஇயர்** (<*தருகிய/தருகியர்), **உணீஇய/உணீஇயர்** (உணுகிய/உணுகியர்), **மண்ணிய/மண்ணியர்** முதலான **செய்யிய/செய்யியர்** வாய்பாட்டு வினைகளின் நிகழ்ச்சி செவ்வியல் தமிழில் காணப்படுகின்றன. இந்த வினைவடிவங்கள் **குடிக்கிய/குடிக்கியர், மேய்க்கிய/மேய்க்கியர், விதைக்கிய/விதைக்கியர்** முதலான வல்வினையமைப்புகளின் ஈற்றில் நிகழும் **-இய(ர்)** என்பது படியெடுக்கப்பட்டு, மெல்வினையடிகளையடுத்து கொண்டு சேர்க்கப்படுவதன் மூலம் தோற்றம் கொள்கின்றன.

செயர், செய்யியர் வாய்பாட்டு வினைவடிவங்கள் பிற்காலத் தமிழிலும் இக்காலத் தமிழிலும் வழக்கற்றுப்போயின. ஆயினும் செய்யிய வாய்பாட்டு வடிவங்கள் குமரித்தமிழில் இன்றும் வழக்கில் உள்ளன. இந்த வினைவடிவங்கள் அந்தத் தமிழில் செயவென் எச்சப் பொருண்மையையும் நிகழ்காலப் பெயரெச்சப் பொருண்மையையும் உணர்த்துகின்றன.

செயர் வாய்பாட்டு வினைவடிவங்கள் கருநாடக மாநிலத்தில் வசிக்கும் சங்கேதி அந்தணர்கள் பேசும் தமிழில் இறவாக்காலப் பெயரெச்சப் பொருண்மையை உணர்த்துகின்றன. (K.Narayana.2007:149) பின்வரும் எடுத்துக்காட்டுக்களைக் கருத்தில் கொள்க.

வினையடி	**பெயரெச்சம்**	**பொருண்மை**
பாடு	பாடர்	'பாடும்/பாடுகின்ற'
மாடு	மாடர்	'தானியம் புடைக்கும்/புடைக்கின்ற'
பண்ணு	பண்ணர்	'பண்ணும்/பண்ணுகின்ற'
தள்ளு	தள்ளர்	'தள்ளும்/தள்ளுகின்ற'
உடு(=விடு)	உடர்	'விடும்/விடுகின்ற'
கொளு	கொளர்	'கடிக்கும்/கடிக்கின்ற'

கடி (=கடை) கடியர் 'கடையும்/கடைகின்ற'

புடி (=பிடி) பிடியர் 'பிடிக்கும்/பிடிக்கின்ற'

சங்கேரித் தமிழில் வல்வினை-மெல்வினை பாகுபாடு உள்ளதா என்பது தெரியவில்லை. இந்தப் பாகுபாடு அந்த மொழியில் இருக்குமானால் வினையமைப்புகள் எப்படி மாறுபடுகின்றன என்பதை விளக்கியாகவேண்டும். அந்த விளக்கத்தைச் சங்கேதி அந்தணர்கள்தான் அளிக்கவேண்டும்.

சுருக்கவிளக்கம்

அகம்	அகநானூறு
க.ரா.	கம்பராமாயணம்
குறு.	குறுந்தொகை
சீ.சி.	சீவக சிந்தாமணி
சேனா.	சேனாவரையம்
சொல்.	சொல்லதிகாரம்
திருவாய்.	திருவாய்மொழி
நம்.	நம்மாழ்வார்
நற்.	நற்றிணை
நாலா.	நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
பதி.	பதிற்றுப்பத்து
புறம்.	புறநானூறு
வ.கு.	வன்னிய குலம்
வ.நி.	வண்ண நிலவன்
ஹெப்.	ஹெப்சிபா ஜேசுதாசன்

கருவி நூல்

வண்ணநிலவன்.1979, கடல்புரத்தில், சென்னை, நர்மதா பதிப்பகம்.

வன்னியகுலம்.1986, ஈழத்துப் புனைகதைகளில் பேச்சுவழக்கு, யாழ்ப்பாணம், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்.

ஹெப்சிபா ஜேசுதாசன், 1964 (அடுத்த இரண்டு பதிப்புகள்: 1985, 2001). **புத்தம் வீடு**, சென்னை, மருதா பதிப்பகம்.

Narayana.K.2007, Morphology of Sanketi.In H.S.Ananthanarayana.

Ananthanarayana.H.S.(Editor), 2007, Sanketi-A Liguistic Study, Mysore, Samudhaya Adhyayana Kendra Charitable Trust.

இமயத்தின் உச்சியில் இரட்டைக் காப்பியங்கள்

பேராசிரியர் **பழனி அரங்கசாமி**
மேனாள் ஆங்கிலப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.
கைபேசி: 9486576619

தமிழில் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தனித்தன்மை வாய்ந்த முழுமுதற்காப்பியங்கள். இவற்றின் இலக்கியச் சிறப்பினை இமாலய மலையின் உச்சியில் புகழ்ந்து பேசுதற்கு வாய்ப்பளித்த இந்திய நாட்டின் உயராய்வு நிறுவனம் ஒன்று சிம்லாவில் பன்னெடுங்காலமாகப் பணியாற்றி வருவது நம்மில் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை தனது நேரடி நிர்வாகத்தில் நடத்துகின்ற இந்நிறுவனம் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் திருச்சியிலிருந்து 2500 கி.மீட்டர் தூரத்தில் ஏழாயிரத்து இருநூறு அடி உயரத்தில் இமாசல மாநிலத்தின் தலைநகராக விளங்குவது சிம்லா எனும் சுற்றுலாத்தலம். முற்காலத்தில் சியாமளா எனும் இறைவியின் பெயரை உள்ளடக்கிய ஒரு சிறு நகரமாக இருந்துள்ளது. இந்திய உயராய்வு நிறுவனம் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அங்குதான் இயங்கி வருகிறது. வெள்ளையராட்சியில் டில்லியில் இருந்த வைசிராய்கள் டில்லி மாநகரத்து கடுங்கோடை வெப்பம் தாங்காமல் சிம்லாவில் சென்று தங்குவதற்கு வசதியாக 1835ஆம் ஆண்டு அந்நகரத்தின் மிக உயரமான பகுதியில் ஒரு மூன்றடுக்கு மாளிகை கட்டியுள்ளனர். உள் கட்டமைப்பு முழுதும் பர்மாத் தேக்கு மரத்தினால் மிக அழகாக வடிவமைத்துக் கட்டப்பட்டுள்ளது. கட்டிடத்தின் உச்சியில் நமது மூவண்ணக்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டுள்ளது.

இந்திய நாட்டின் விடுதலைக்குப் பின்னர் நம்முடைய குடியரசுத்தலைவர் யாரும் அதில் சென்று தங்குவதில்லை. காலியாக இருந்த அந்த மாளிகையினைப் பல இந்திய நாட்டுக் கோடீசுவரர்கள் விலைக்கு வாங்க முயன்றுள்ளனர். உலகப் புகழ் பெற்ற ஓபிராய் ஹோட்டல் நிறுவனமும் அந்த முயற்சியில் ஈடுபட்டது. ஆயினும் மைய அரசு அதனை வணிகப் பொருளாக மாற்றாமல் வளரும் நாடான இந்தியாவின் முன்னேற்றத்துக்கு வழிவகை காட்டும் ஒரு கல்விசார் நுண்ணாய்வு நிறுவனமாக்க விரும்பியது.

இந்தியப் பிரதமர் பண்டித நேருவும், மேனாள் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர்.இராதா கிருஷ்ணனும் ஆட்சிப் பணியில் இருக்கும் திறமை சான்ற இளைய தலைமுறையினர் நீதி நிர்வாகம் மற்றும் பொது நலம், வளர்ச்சித்திட்டம் பற்றிய ஆய்வு நடத்துவதற்கு ஏதுவாக ஒரு உயராய்வு நிறுவனம் தொடங்க முடிவு செய்து ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்துநான்காம் ஆண்டு இதனைத் துவக்கினர். ஆய்வுப்பணியில் ஈடுபாடு உள்ளதாகக் கூறிய பற்பல அய்.ஏ.எஸ் அதிகாரிகளுக்கு ஊதியத்தோடு கூடிய விடுமுறையினையும் பற்பல சலுகைகளையும் அளித்துப் பல்வேறு தலைப்புகளில் ஆய்வும் களப்பணியும் மேற்கொள்ளச் செய்தனர். இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் அங்கு சென்று தங்கி இந்த வாய்ப்பினையும் சலுகையினையும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். குறிப்பிட்ட காலம் முடிந்ததும், தத்தமது பணிக்குச் சென்றனர். சிம்லாவில் தங்கினர் வந்து விட்டனர். ஆய்வு மட்டும் நடைபெறவில்லை. இந்த முயற்சியில் ஏமாற்றம் அடைந்த மைய அரசும், ஆய்வு நிறுவனமும் அந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டு நாடெங்கணும் உள்ள பல்கலைக்கழகங்கள், மற்றும் கல்லூரிகளின் பேராசிரியர்களுக்கு இந்த வாய்ப்பினைக் கொடுத்தது. அதற்குப் பின்னர்தான் உயராய்வுத் திட்டம் எதிர்பார்த்தபடி சிறப்புடன் செயல்பட்டது. பல்வேறு கருத்தரங்கங்களும் மாநாடுகளும் நடத்தப்பெற்றன. இதன் விளைவாக இலக்கியம், தத்துவம், வரலாறு, பொது நிர்வாகம், நீதிநெறி, சமூக முன்னேற்றம், சட்ட இயல் போன்ற துறைகளில் நுண்ணாய்வு செய்து நூற்றைம்பதுக்கு மேற்பட்ட ஆய்வு நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. அந்த உயராய்வு நிறுவனம் இந்திய நாட்டின் ஒரு சிந்தனைக் களமாக இப்போது செயல்பட்டு வருகின்றது.

தொடங்கிய காலந்தொட்டு இலக்கியத்துறையில் மகாபாரதக் காவியம் பற்றிய ஒரே ஒரு கருத்தரங்கம் ஒரு சமயம் நடைபெற்றுள்ளது. இந்திய நாட்டின் பல்வேறு மொழிகளில் ஏராளமான மாகாவியங்கள் உள்ளன. எனவே வடமொழியை ஒத்த தமிழ்மொழியின் முழுமுதற்காப்பியங்களான இரட்டைக் காப்பியங்கள் குறித்த ஒரு இரண்டு நாள் கருத்தரங்கை நடத்துவதற்குத் திட்டமிட்டவர் அந்த ஆய்வு நிறுவனத் தலைவர் பேராசிரியர் கபூர் ஆவார். பாகிஸ்தானில் பிறந்து வளர்ந்து நாட்டுப் பிரிவினையின்போது டில்லிக்கு வந்த பஞ்சாபியர். ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தத்துவப்பேராசிரியராக இருந்தவர். இது பற்றித் தொலைபேசியில் என்னிடம் தொடர்பு கொண்டு

இரட்டைக்காப்பியம் பற்றிய பல்வேறு தலைப்புகளிலும் பொழிவு நிகழ்த்தும் பேராசிரியர்கள் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும் என்றும் கூறினார். ஏனெனில் அந்த ஆய்வு நிறுவனத்தில் தமிழ்நாட்டிலிருந்து ஜே.ரெங்கசாமி எனும் ஒரு பேராசிரியரே வைணவம் பற்றிய ஆய்வு செய்கிறார். இவரே இந்நிகழ்ச்சியினை நடத்துவதற்குத் துணை நின்றவர். ஏனையோர் அனைவரும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து சென்றவர்கள். எனவே கருத்தரங்கச் சொற்பொழிவும், அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த விவாதமும், கலந்துரையாடலும் நடைமுறையில் நாடெங்கணும் பொது மொழியாக உள்ள ஆங்கிலத்திலேயே நடைபெற வேண்டிய கட்டாயம். கருத்தரங்க நிகழ்ச்சிகள் அக்டோபர் திங்கள் 29, 30 ஆகிய (29.10.2018, 30.10.2018) இரண்டு நாட்களிலும் நிகழ்ந்தன.

தமிழகத்திலிருந்து அந்தக் கருத்தரங்கிற்கு அழைக்கப் பெற்ற பேராசிரியர்கள் எண்மர். உடல்நிலை, சொந்த அலுவல் காரணமாக ஓரிருவர் வரவில்லை. நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்ட டாக்டர் பழனி.அரங்கசாமி முதல் நாள் தொடக்கவிழாவில் மையக் கருத்துரை ஆற்றினார். உலகளாவிய நிலையில் அறிமுகமான வியாசபாரதம், வால்மீகி இராமாயணம், ஹோமரின் இலியட், மற்றும் தாந்தே, வர்ஜில் போன்றோரது காப்பியங்கள் மொழியாலும் கலாச்சாரத்தாலும் வேறுபட்டிருப்பினும் மனிதகுலத்திற்குத் தேவையான நீதி நெறிகளைப் புகட்டுவதில் ஒன்றுபட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான பாடல்களால் இயன்ற அக்காப்பியங்கள் கதைகளை மட்டுமின்றிக் கவிதைநலம், கற்பனை, மொழிநடை, நீதிநெறி போன்றவற்றிலும் சிறந்து விளங்குவதனையும் குறிப்பிட்டார். தற்காலத்திய பாரதசக்தி மகாகாவியம், இராவண காவியம் போன்ற மதச்சார்பற்ற காவியங்களையும் கோடிட்டுக் காட்டினார். அவை அனைத்துக்கும் குறையாத தனித்தன்மைக்கும், தொன்மைக்கும் காப்பியத்திறனுக்கும் தமிழ் மொழியின் இரட்டைக் காப்பியங்கள் புகழ்வாய்ந்தன என்று சுட்டிக் காட்டியதோடு, சிலப்பதிகாரத் திறனாய்வு மற்றும் மணிமேகலையின் பன்முகத் தொண்டு ஆகிய தலைப்புகளிலும் அவரது பொழிவுகள் அமைந்தன. சிலம்பு ஒரு வரலாற்றுக் காவியமே தவிர புனைந்துரை அல்ல என்பதை உரிய சான்றுகள் காட்டி நிறுவினார். நாட்டுப்புறக் கதைப் பாடலினின்றும் உருவான அது ஒரு கற்பனைக் காவியம் எனும் தவறான கருத்தை மறுத்துரைத்தார்.

சிலப்பதிகாரக் கவிதை நலன் பற்றிய பொழிவினை ஆற்றிச் சிலம்பின் தனித்தன்மையினை வெளிப்படுத்திய டாக்டர்.ராஜமாணிக்கம்

ஓய்வு பெற்ற ஆங்கிலப் பேராசிரியர். காப்பியச் சிறப்பியல்புகள் சான்ற முத்தமிழ்க் காப்பியம் தமிழன்னையின் மணிமுடியென்னும் கருத்தினை வலியுறுத்திப் பேசிய பேராசிரியர் சங்கீதா சேலம் பெரியார் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலத்துறைத் தலைவர். தமிழ்ப்பல்கலைக்கழகத்து மேனாள் துணைப்பதிவாளராயினும், எழுத்தாளராக விளங்கும் நண்பர் சுப்பராயலுவின் சொற்பொழிவு மணிமேகலையில் காணப்படும் இயற்கை மீறிய செயல்களைச் சுட்டிக் காட்டியது. சென்னையைச் சார்ந்த தமிழ்ப் பேராசிரியர் ராஜகோபாலன் சிலப்பதிகாரத்தின் முத்திறக் கொள்கை குறித்துப் பேசினார். அனைவரது ஆய்வுரையினையும் தொடர்ந்து கேட்ட அவையோருள் சிலர் பற்பல செய்திகளுக்கு விளக்கம் கேட்டுத் தெளிவு பெற்றனர்.

சிம்லாவில் உள்ள நுண்ணாய்வு நிறுவனத்தைச் சார்ந்த பற்பல பேராசிரியர்கள் இரட்டைக் காப்பியங்கள் குறித்த பல்வேறு வினாக்களை எழுப்பிச் சுவையான இலக்கியச் சூழலை உண்டு பண்ணினர். தொடக்கத்தில் தலைமை வகித்து முன்னுரையாற்றிய பேராசிரியர் கபூர் கருத்தரங்குப் பொழிவுகள் அனைத்தும் விரைவில் நூலாக வெளிவரும் என்று அறிவித்தார். நிறுவனத்தின் தலைவராக விளங்கும் இப்பெருமகனாரே இரட்டைக் காப்பியங்களின் சிறப்பியல்புகளை இமயத்தின் உச்சியில் நின்று நிலைத்துப் பெருமைப்படுத்துவதற்கு முழு முதற் காரணமாவார். நிறுவனத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப் பெற்ற பேருந்தில் கருத்தரங்கில் கலந்து கொண்ட பேராசிரியர்கள் நிகழ்ச்சிகள் நிறைவுற்ற பின்னர் நகர் வலம் செய்தனர். இமாசலப்பிரதேசத்தின் தலைநகர் என்பதோடு சுற்றுலாத்தலம் என்பதால் மக்கள் தொகை பெருகி வருவதை மால் என்னும் பகுதியில் காண முடிகிறது. அந்தப் பகுதியில் கார், ஜீப், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்கள் போகக்கூடாது என்று தடை விதித்துள்ளார்கள். நகரின் தூய்மையைக் காப்பதற்கு அப்படியொரு ஏற்பாடு.

நவம்பர் மாதத் தொடக்க நிலையிலேயே இரவில் தாங்க முடியாத குளிர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் நகரிலேயே பனிப் பொழிவு இருக்கும் என்று கூறுகின்றனர். அக்ரூட், பாதாம், உலர் திரட்சை ஓரளவு மலிவாகக் கிடைக்கிறது. சிம்லாவில் விளையும் ஆப்பிள் பச்சையாகவும், இளம் மஞ்சள் நிறத்திலும் உள்ளது. பிற இடங்களில் கிடைக்கும் ஆப்பிள்களை விட மிகவும் சுவையாக இருக்கிறது. புகழ்பெற்ற ஒரு இனிப்புக் கடையில் வறுத்து எடுத்துப் பின்னர் முறுகக் காய்ச்சிய பாலில்

போட்டுக் கொடுக்கப்படும் ஜிலேபியினை முறுக்கு மாதிரி மொறு மொறு வென்று சுவைத்துச் சாப்பிடலாம். ஆங்காங்கு மலையை இடித்தும் உடைத்தும் நகர் விரிவாக்கப்படுகிறது. கிழக்கு மேற்கில் ஏழு கிலோ மீட்டர் நீளமுள்ள அந்நகரத்திலிருந்து மணாலி கூலு போன்ற இடங்களுக்குச் செல்லலாம்.

நுண்ணாய்வு நிறுவனத்தை ஒரு பாதுகாக்கப்பட்ட இடமாக வைத்துள்ளனர். பரந்த புல்வெளிகளும், மலர்ச் செடிகளும், ஆப்பிள் மரங்களும் கவனமுடன் பராமரிக்கப்படுகின்றன. 150 வயது என்று குறிப்பிடப்பெற்றுள்ள தென் அமெரிக்க நாட்டு மரம் ஒன்று வெண்ணிற மலர்களோடு நிறுவனத்துக்கு எதிரில் பாதுகாப்பாக வளர்க்கப் பெறுகின்றது. பொதுநலனையும், ஆய்வினையும் சிந்தனைத் திறனையும் குறிக்கோளாகக் கொண்டுள்ள இந்த நிறுவனத்துக்குத் தமிழக, கேரள, கன்னடப் பகுதிகளிலிருந்து அதிகமாக ஆய்வாளர்கள் செல்வதில்லை என்ற குறைபாடு நீங்க வேண்டும். நிறுவனத்தின் வளர்ச்சியில் இந்திய நாட்டின் தொன்மை, உயர்வு, செம்மை ஆகியவற்றோடு அறிவியல் வளர்ச்சி, கணினிப் பயன்பாடு ஆகியனவும் சிறப்புற்று ஓங்கும் என்று நம்பலாம்.

பாண்டித்துரைத்தேவர்

“இனியுமோர் தமிழ்ச் சங்கம் காண்பேன்
இருந்த முதலிடை கடைச் சங்கம் போலவே
எனச் சொன்ன பாண்டித்துரைத் தேவன் சொல்லை
இவ்வையம் அந்நாளில் நம்பவே இல்லை!

வியந்தது வையம் சென்றநாள் சிலவே
விரிந்தது மதுரைத் தமிழ்ச்சங்க நிலவே;
அயர்ந்த தமிழரின் ஆடலும் பாடலும்
அறிவின் செயலும் மிளிர்ந்தன பலவே!

புலவர் வகுப்பு மூன்று படைத்தான்
புன்மையின் மடமையின் என்பை உடைத்தான்,
பலதமிழி லக்கிய மாசு துடைத்தான்,
பாண்டித் துரைத்தேவன் புகழ்க்கொடி எடுத்தான்”

- பாவேந்தர் பாரதிதாசன்

சங்கச் செய்திகள்

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியில் 03.01.2019, 04.01.2019 ஆகிய இரு நாட்கள் “பிழையின்றி எழுதுவது எப்படி?” என்ற பொருண்மையில் தேசியப் பயிலரங்கம் நடைபெற்றது. இப்பயிலரங்கிற்கு 15 கல்லூரிகளைச் சேர்ந்த 150 மாணவ மாணவியர் பங்கேற்றுப் பயனடைந்தனர். திருவையாறு அரசர் கல்லூரி மேனாள் பேராசிரியர் முனைவர் க.திருஞானசம்பந்தம் அவர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார். சங்கச் செயலர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்கள் பயிலரங்கில் கலந்து கொண்ட மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். உதவிப் பேராசிரியர் முனைவர் அ.நந்தினி இப்பயிலரங்கினை ஒருங்கிணைத்தார்.

07.01.2019 அன்று முற்பகல் 11 மணியளவில் வெ.சாமிநாத சர்மா அவர்களின் நினைவேந்தல் நடைபெற்றது. முதுகலை முதலாமாண்டு மாணவி பா.பாண்டீஸ்வரி தமது உரையில் “வெ.சாமிநாத சர்மா அவர்கள் எழுத்தில் மட்டுமல்ல; வாழ்க்கையிலும் ஒழுக்கத்தையும், பண்பையும் கடைப்பிடித்தவர். தமது 83 ஆண்டு கால வாழ்க்கையில், சாமிநாத சர்மாவின் இலக்கிய வாழ்க்கை 64 ஆண்டுகளாகும். அவருடைய 78 நூல்கள் அவரது புகழைப் பரப்பிக் கொண்டு வருகின்றன. அவர் தமிழில் அரசியல் இலக்கியத்தின் முன்னோடி ஆவார். தேசியவாதியாகவும், காந்தியவாதியாகவும் இறுதி வரை வாழ்ந்தவர்” என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக வெ.சாமிநாத சர்மா அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

11.01.2019 அன்று கல்லூரி வளாகத்தில் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரிச் செயலாளர் இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி அவர்களும் சங்கச் செயலாளர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்களும் விளக்கேற்றிப் பொங்கல் விழாவைத் துவக்கிவைத்தனர். சிறப்பு விருந்தினராக உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் (பொ.) முனைவர் பெ.சந்திரா அவர்கள் கலந்து கொண்டார். மாணவர்கள் பொங்கல் படைத்துக் கொண்டாடி மகிழ்ந்தனர். இவ்விழாவில் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

24.01.2019 அன்று பிற்பகல் 2 மணியளவில் நெகிழியின் தீமைகள் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

மதுரை காமராசர் பல்கலைக்கழக சுற்றுச்சூழலியல் துறைத்தலைவர் முனைவர் எஸ்.கண்ணன் அவர்கள் கருத்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார். 50 மாணவர்கள் கலந்துகொண்டனர். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் பா.நேருஜி ஆகியோர் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தனர்.

25.01.2019 அன்று முற்பகல் 11 மணியளவில் தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் தேர்தலில் தமது வாக்குரிமையை நேர்மையான வழியில் பயன்படுத்துவோம் என்று உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் பா.நேருஜி ஆகியோர் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தனர்.

25.01.2019 அன்று பிற்பகல் பாண்டியன் நூலகம் வாசகர் வட்டத்தின் சார்பில் புத்தக விமர்சனப் போட்டி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் தலைமை தாங்கினார். உதவிப் பேராசிரியர்கள் முனைவர் அ.நந்தினி மற்றும் முனைவர் பா.நேருஜி ஆகியோர் நடுவர்களாக இருந்து மதிப்பீடு செய்தனர். பத்தொன்பது மாணவர்கள் போட்டியில் பங்கேற்றனர். நூலகர் தி.பிருந்தா இப்போட்டியினை ஒருங்கிணைத்தார்.

26.01.2019 அன்று காலை சங்க வளாகத்தில் குடியரசு தினக் கொடியேற்று விழா நடைபெற்றது. செந்தமிழ் இதழின் பதிப்பாசிரியர் பேராசிரியர் இரா.சதாசிவம் அவர்கள் கொடியேற்றினார். சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி, சங்க ஆட்சிக்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், மேனாள் மற்றும் இந்நாள் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

30.01.2019 அன்று சங்க ஆட்சிக்குழு உறுப்பினர், முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, அன்னாருக்கு அவரது இல்லத்தில் சங்கச் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் பொன்னாடை போர்த்தி சங்கம் மற்றும் கல்லூரியின் நிர்வாகக்குழு சார்பாக வாழ்த்து தெரிவித்தார். செந்தமிழ் பதிப்பாசிரியர் பேராசிரியர் இரா.சதாசிவம், கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மார்ச் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



கா.நமச்சிவாய முதலியார்
(மார்ச்.13)



அசோகமித்திரன்
(மார்ச்.23)

ந.மு. வேங்கடசாமி நாட்டார்
(மார்ச்.28)



தமிழ் ஒளி
(மார்ச்.29)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்னம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1